SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:2, Issue:4, Pages:56
November-2022, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2022,
விலை ரூ.20/-



## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருமலையில் 27-09-2022 முதல் 05-10-2022 வரை வைபவமாக நடைபெற்ற பிரம்மோத்ஸவத்திருக்காட்சிகள். சிம்ம வாகன சேவையில் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள், தி.தி.தே. திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர் திரு.வி.வீரப்ரம்ஹம், ஐ.ஏ.எஸ். அவர்கள், இணைச்செயலாட்சித்தலைவர் (H&E) திருமதி எஸ்.பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள் பங்கு கொண்டனர்













அத$_4$ர்மாபி$_4$ப$_4$வாத்க்ருஷ்ண
ப்ரது$_3$ஷ்யந்தி குலஸ்த்ரிய: |
ஸ்த்ரீஷு து$_3$ஷ்டாஸு வார்ஷ்ணேய
ஜாயதே வர்ணஸங்கர: ||

ஸ்ரீகிருஷ்ணா! அதர்மம் அதிகமாகப் பெருகுவதால் குலப்பெண்கள் நடத்தை கெட்டுப் போவார்கள். மேலும், வார்ஷ்ணேயா! பெண்கள் நடத்தை கெட்டுப் போனால் வர்ணக்கலப்பு உண்டாகி விடுகிறது.

– ஸ்ரீமத் பகவத் கீதை 1–41

யதஸங்கல்பாத் பவதி கமலே யத்ர தேஹிந்யமீஷாம்
ஜந்ம ஸ்த்தேம ப்ரளய ரசநா ஜங்கமாஜங்கமாநாம் |
தத் கல்யாணம் கிமபி யமிநாமேக லக்ஷ்யம்ஸமாதௌ
பூர்ணம் தேஜ: ஸ்ப்புரதி பவதீ பாதலாக்ஷா ரஸாங்கம் ||

பெரிய பிராட்டியே! உலகத்தைச் சரீரமாகக் கொண்ட எந்தப் பரமாத்மாவிடத்தில் இந்த ஜங்கமம், ஸ்தாவரம் ஆகிய வஸ்துக்களின் பிறப்பு நீடித்து நிற்றல், அழிவு ஆகிய செயல் எதனுடைய ஸங்கல்பத்தால் நடைபெறுகின்றதோ அந்த மங்களமானதாய், யோகிகளுக்கு தியானத்தில் ஒரே இலக்காகவுள்ளதாய், எங்கும் நிறைந்திருப்பதாய் அற்புதமாயுள்ள (எம்பெருமானென்னும்) தேஜஸ் (ஒளி) உன் திருவடிகளின் செம்பஞ்சுக் குழம்பை சின்னமாகக் கொண்டு பிரகாசிக்கின்றது.



– ஸ்ரீஸ்துதி 4

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவு தன்னிகரற்றது!**
**தி.தி.தேவஸ்தானத்திற்கும் வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான"ஸப்த வர்ண"**
**சமய மாத இதழ் "ஸப்தகிரி"யின் விலையில் மாற்றம்!!**

**உங்கள் இல்லங்களுக்கே அலர்மேல் மங்கை உறை மார்பன்**
**மாதாமாதம் எழுந்தருளும் அனுபூதியைப் பெறுங்கள்**

ஸப்தகிரி சமய மாத இதழுக்கு சந்தா செலுத்துங்கள்...



திருமலையப்பனின் அக்ஷர பிரசாதமான "ஸப்தகிரி"யை திங்கள்தோறும் பெற்றிடுங்கள்





# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)

### .....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

இவ்விலைமாற்றம் செப்டம்பர் 2022 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
இவ்விலை மாற்றம் புதிதாகக்கட்டும் சந்தாதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

**விவரங்களுக்கு :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543

2



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2022




மலர் 02 இதழ் 04



சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



**பிரதிகளுக்கு:**

THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


கஜலக்ஷ்மி -இரா.அமிர்தவர்ஷினி, புதுச்சேரி. 7
கத்யத்ரயத்தில் பிராட்டி 8
-தாயார் கோமடம் சேஷாத்ரிதாஸன், காஞ்சீபுரம்.
மங்கலம் தரும் மஹாலக்ஷ்மி 12
-ஸ்ரீ.உ.வே.அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி, சென்னை.
மஹாலக்ஷ்மி அஷ்டகம் 14
-முனைவர் ஆ.செந்திலாண்டவன், சென்னை.
தாயாரின் கருணையும் ஸ்ரீஸ்துதியும் 18
- திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், அம்பத்தூர்.
முதலாழ்வார்கள் போற்றும் திருமகள் 21
-திரு.ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி.
ஆகாசராஜன் திருமகள் ஸ்ரீபத்மாவதியும் திருச்சானூர் ஸ்ரீமகள் ஸ்ரீபத்மாவதியும் - திரு. ஜீ. பாலசுப்ரமண்யம், திருப்பதி. 28
அன்னமய்யா போற்றும் பத்மாவதி தாயார் 31
-திருமதி ராதா ராமநாதன், திருப்பதி.
பெரிய பிராட்டியார் வைபவம் -டாக்டர் ஏ.வி.ரங்காசாரி , கடலூர். 35
லக்ஷ்மி கடாக்ஷம் -திரு. அசோக் ராஜா, சென்னை. 39
மங்களம் பெருக்கும் மஹாலக்ஷ்மி தலங்கள்
- டாக்டர் அருண்குமார், புதுச்சேரி. 41
திருமகள் சேர் மார்பன்- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. 45
ராசி பலன்கள் : நவம்பர் 2022
-டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். 47
நீதிக்கதைகள் : தாயாரிடம் பக்தி
-திருமதி எஸ்.வைஷ்ணவி, திருப்பதி. 48
சித்திரக்கதை : அலர்மேல்மங்கையின் திருவருள் 52


**வாசகர்களுக்கு...**

இவ்விதழ் பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளி வர வேண்டிய தொடர் கட்டுரைகள் யாவும் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். -பிரதான ஆசிரியர்

**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம், திருமலை.
பின்னட்டை : ஸ்ரீபத்மாவதி தாயார் புஷ்பயாகம், திருச்சானூர்.



உங்களுடன்...

# கார்த்திகை பிரம்மோத்ஸவம்

உலகிற்கு எல்லா வளங்களையும் அருள்பவள், அனைவருக்கும் மன வலிமை அளித்து மகிழ்ச்சியை உண்டு பண்ணுபவள்; நற்செல்வங்கள் அனைத்தையும் அளிப்பவள்; தம் பக்தரிடத்தே கருணை கொண்டு அவர்களுக்காக எம்பெருமானிடத்தே சிபாரிசு செய்பவள்; ஆனந்தமே வடிவெடுத்தவள் பெரியபிராட்டியார் ஆவாள். அப்பிராட்டியே இப்பிரபஞ்சத்தின் ராணியாகப் போற்றப்படுபவள். அவளே எம்பெருமானின் பட்டத்து மகிஷியாவாள். அவளுடைய தெய்வீகப் பெயர் தாமரையிலிருந்து வெளிப்பட்டதை வேதம் குறிப்பிடுகிறது.

இது குறித்தே இத்தாயார் தாமரை மலரில் வீற்றிருப்பதனை "தோடுலா மலர்மங்கை தோளினைத் தோய்ந்தவன்" அதாவது தாமரைப் பூவினில் வசிக்கும் திருமகளுடன் கூடிய எம்பெருமான் என்று குலசேகராழ்வார் அருளிச் செய்கிறார். நம்மாழ்வாரும், "அலர்மேல் மங்கை உறை மார்பன்" என்று திருவேங்கடமுடையான் தாமரை மேல் வீற்றிருக்கும் திருமகளை தன் இதயத்தில் கொண்டிருக்கிறார் என்கிறார். எம்பெருமானின் இதயக் கமலத்தில் நீக்கமற வீற்றிருக்கும் அம்மஹாலக்ஷ்மி தாயாரே இக்கலியுகத்தில் சேஷாசல மலைத்தொடருக்கு அருகில் திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதியாக கொலுவீற்றிருக்கின்றாள். தன்னை நாடி வரும் பக்தர்களின் பாவங்களைப் போக்கி, அவர்களின் நற்குணங்களை மேம்படுத்தி, அவர்கள் எம்பெருமானை அணுகுவதற்கு தகுதியானவர்களாக ஆக்குகிறாள். ஒரு தாயானவள் தன் குழந்தையின் குற்றத்தை குணமாகக் கொண்டு அக்குழந்தையின் நலனுக்காகவே பேசுவதுபோல், தாயாரும் இறைவனிடம் நமக்காக பரிந்து பேசுகிறாள். பின்னர் எம்பெருமானிடத்தில் சிபாரிசு செய்து, அருள் கிடைத்திட துணைபுரிகிறாள்.

இத்தாயாரானவள் தன் இவ்வுலகக் குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்தி அவர்கள் திருவேங்கடவனை அடைந்திடுமாறு வழிகாட்டுகிறாள். பத்மாவதி தாயாரோ கருணை, மென்மை குணங்களைக் குறிக்கும் தாமரையைத் தன் திருக்கரங்களில் ஏந்தி இருக்கிறாள். எண்ணிலடங்கா அனைத்து கல்யாண குணங்களையும் கொண்டவள். குறிப்பாக வாத்ஸல்யம் மற்றும் சௌலப்யத்தினால் தன்னை அடைக்கலம் என நாடி வரும் அனைவருக்கும் மேன்மையை வழங்குகிறாள். வாத்ஸல்யம் என்றால் வத்ஸ எனில் குழந்தை அல்லது கன்றுக்குட்டி. பசுவானது கன்றினை ஈன்ற பின்னர் அதனை மெதுவாக நக்கி தூய்மைப்படுத்துவது போன்று, மானிடர்களாகிய தம் பக்தர்கள் செய்யும் பாவச் செயல்களை மன்னித்து அருள்கிறாள். இரக்க குணம் கொண்ட அவள் தம் பக்தர்களின் பாவச் செயல்களை எண்ணாமல் தன் அளவற்ற கருணையை அவர்கள் மீது பொழிகிறாள். அவளோ கருணா கடாக்ஷதாரணி.

பதகவிதை பிதாமகரான அன்னமய்யா தனது திருமலை பயணத்தின் போது நடுவே களைப்புற்று மலையேற முடியாமல் மனமுடைந்தார். அப்பொழுது ஸ்வாமியின் பிரசாதத்தை அவருக்கு அளித்து மலையேற அருள்புரிந்தவள் அத்தாயாரே ஆவார். இவ்வளவு மகிமைப் பொருந்திய அத்தாயார் திருவேங்கடமுடையானின் நெடிய தவத்தினை மெச்சி கார்த்திகை மாதம், பஞ்சமி நாளில் உத்திராடம் நக்ஷத்திரத்தில் திருச்சானூர் பத்மசரோவரத்தில் தாமரை மலரில் அவதரித்தாள். அத்தாயார் அவதரித்த அந்நன்னாளினை முன்னிட்டு வருடம் தோறும் பிரம்மோத்ஸவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

இக்கலியுக மாந்தர்களைக் காக்க ஒன்பது நாட்களும் வெவ்வேறு வாகனங்களில் வெவ்வேறு அலங்காரங்களில் எழுந்தருள்கிறாள் தாயார். தானே தாயாராகவும், தானே பரந்தாமனாகவும் இக்கலியுக மாந்தர்களின் பாவங்களைப் போக்க காட்சியளிக்கின்றாள். கொடிய தொற்று நோயான கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் அதாவது இரண்டு ஆண்டுகளுக்குப் பின் பத்மாவதி தாயார் திருமாடவீதிகளில் எழுந்தருளி தம் பக்தர்களுக்கு காட்சியளிக்க உள்ளாள்.

வாருங்கள்! அத்தாயாரை அகம் குளிர தரிசியுங்கள்!! அருள்பெறுங்கள்!!!

**கஜபூஜை செய்தால் மகிழும் மகாலட்சுமி!**

...... இரா.அமிர்தவர்ஷினி, புதுச்சேரி.

யானையின் மத்தகத்தில் (முன் நெற்றி) லட்சுமி குடியிருப்பதாக ஐதீகம். இதனால், தினமும் கோயில் நடை திறந்ததும் கருவறை முன் யானைக்கு பூஜை நடத்தி சன்னதியை சுற்றி வரச் செய்வர். இதற்கு "கஜ பூஜை" என்று பெயர். யானையின் பிளிறல் ஓசை கேட்டு லட்சுமியின் மனம் மகிழும் என "ஸ்ரீசூக்தம்" என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. லட்சுமி அவதரித்ததும், பூமியைத் தாங்கும் எட்டுத் திசை யானைகளும் புனித தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து வணங்கின.

இவளை "கஜ லட்சுமி" என்பர். கஜலட்சுமி,யானை சிற்பத்தை கோயில் கருவறை நுழைவு வாயிலிலும், வீட்டில் தலைவாசலிலும் அமைப்பது வழக்கம்! யானையிடம் ஆசிர்வாதம் வாங்கினால் லட்சுமி கடாட்சம் பெருகும். மூலிகை தாவரங்களை மட்டும் உண்டு மிருகங்களில் பலமுள்ளதாகத் திகழும் உயிரினம் யானை. மகத்தான தெய்வீக அம்சங்கள் பொருந்தியது. உலகில் வாழும் உயிரினங்களில் இரண்டு நாசித் துவாரங்கள் வழியாகவும் ஒரே நேரத்தில் சுவாசிக்கும் தன்மை யானைக்கு மட்டுமே உண்டு.

மனிதர்களாகிய நமக்கு கூட தினமும் 24 நிமிடங்களுக்கு ஒரு முறை நம்முடைய சுவாசமும் ஒரு நாசித் துவாரத்திலிருந்து மற்றொரு நாசி துவாரத்தில் மாறிக் கொண்டே இருக்கும். சுவாசத்தை கட்டுப்படுத்தும் மற்றும் முறைப்படுத்தும் ஆன்மீக முயற்சிகளுக்கு சரகலை என்று பெயர். பிராணாயாமம், வாசியோகம் போன்றவைகளும் நமது சுவாசத்தை தெய்வீகத் தன்மைக்கு முன்னேற்றம் அடைய வைக்கும் ஆன்மீகப் பயிற்சி முறைகளாகும்.

வாசியோகம் அல்லது பிராணாயாமத்தில் குறிப்பிட்ட நிலையை எட்டியவர்கள் எப்போதும் இரண்டு நாசித் துவாரங்கள் வழியாகவும் சுவாசிக்கும் திறமையைப் பெற்று விடுவார்கள். இதற்கு சுழுமுனை வாசி யோகம் என்று பெயர். இயற்கையாகவே சுழு முனை வாசி யோகம் உள்ள யானை அதன் தும்பிக்கையை நம் தலையில் வைத்து ஆசிர்வாதம் செய்வதால் நமக்கு மகாலட்சுமியின் அருள் கிடைக்கிறது என்பதுதான் இதன் பின்னணியில் உள்ள தெய்வீக ரகசியம்!



# கத்யத்ரயத்தில் பிராட்டி

சமஸ்கிருத மொழியில் அமைந்த பக்திப் பனுவல்கள் கத்யம், பத்யம் ஆகிய இரண்டு வகைகளில் இயற்றப்படுவது வழக்கம். இவற்றுள் கத்யம் என்பது உரைநடை–வசன வடிவத்திலும், பத்யம் என்பது சுலோகங்களாகவும் அமைபவையாகும்.

ஸ்ரீவேதாந்த தேசிகர் இயற்றிய ரகுவீர கத்யமும், ஸ்ரீமான் ஸ்ரீசைல ரங்காச்சாரியார் திருவேங்கடமுடையானைக் குறித்து இயற்றியுள்ள ஸ்ரீஸ்ரீநிவாச கத்யமும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மிகவும் பரிச்சயமானவையாகும். விசிஷ்டாத்வைத தத்துவத்தை இந்த உலகுக்கு அளித்த ஸ்ரீராமாநுஜரால் இயற்றப்பட்டதே கத்யத்ரயம். சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், வைகுண்ட கத்யம் என்று உரைநடையில் அமைந்த மூன்று பக்திப்பனுவல்களே கத்யத்ரயம் என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்படுகின்றன.

இவற்றுள் முதலாவதான சரணாகதி கத்யம் அளவில் பெரியது. ஸ்ரீரங்க கத்யம், வைகுண்ட கத்யம் இரண்டும் சற்றே சிறிய அளவிலானவை. கத்யத்தின் ஒவ்வொரு வாக்கியம் அல்லது வசனமும் சூர்ணிகை எனப்படுகின்றது. எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடம் சரணாகதி அடைய விரும்பிய ஸ்ரீராமாநுஜர் பிராட்டியிடமும் எம்பெருமானிடமும் நேரில் விண்ணப்பிப்பதாகவும், அதற்கு அவ்விருவரும் பதிலளிப்பதாகவும் அமைந்த சூர்ணிகைகளையும், பொருத்தமான சில இடங்களில் ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீபகவத்கீதை சுலோகங்கள் உள்ளிட்டவற்றையும் கொண்டதாக சரணாகதி கத்யத்தை ஸ்ரீராமாநுஜர் இயற்றியருளியுள்ளார்.

*“லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுன*
*மத்யமாம் ।*
*அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே*
*குருபரம்பராம் ॥”*

**– காயார் கோமடம் சேஷாத்ரிதாஸன், காஞ்சீபுரம்.**







## தாயாருக்கு குங்குமார்ச்சனை

**ஸ்ரீபத்மாவதி தாயார் உத்ஸவ மூர்த்திக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9.30 மணி முதல் 10.00 மணி வரை ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி முகமண்டபத்தில் அர்ச்சகர்களால் அஷ்டோத்திரம் ஓதப்பட்டு தாயாருக்கு குங்குமம் சமர்ப்பிக்கப்படும். இதனை லக்ஷ்மி பூஜை என்பர். தினமும் மதியம் வேளையில் மூலமூர்த்திக்கு குங்குமார்ச்சனை நடைபெறும். குங்குமம் என்பது மங்கலச் சின்னம். பெண்கள் தங்கள் கணவர் நலமாக இருக்க விரும்பி தம் நெற்றியில் அணியும் பொருளாகும். மங்கள நாயகியான ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு நவம்பர் மாதத்தில் அதாவது பிரம்மோத்ஸவத்திற்கு முன் லக்ஷ குங்குமார்ச்சனை வருடத்திற்கு ஒரு முறை நடைபெறுவது விசேஷமாகும். இதில் ஆயிர நாமங்கள் கொண்ட சஹஸ்ர நாமார்ச்சனை பண்ணுவர்.**

என்ற ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரைக்குரிய தியான சுலோகத்தில் உள்ளபடியும், உடையவர் காலத்திற்குப் பின்னால் அவதரித்த ஸ்ரீவேதாந்த தேசிகர் "இன்னமுதத் திருமகள் என்று இவரை முன்னிட்டு, எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே" என்ற பாசுரத்தில் கூறியபடியும், ஜகன் மாதாவாகிய ஸ்ரீமஹா லக்ஷ்மியை இம்மூன்று கத்யங்களிலும் ஆங்காங்கே புகழ்ந்துரைக்கின்றார் ஸ்வாமி எம்பெருமானார்.

*''பகவந்நாராயணாபிமதானுரூப ஸ்வரூப ரூப குணவிபவைச்வர்யசீலாதி அநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுணகணாம், பத்மவநாலயாம், பகவதீம், ச்ரியம், தேவீம், நித்யாநபாயிநீம், நிரவத்யாம், தேவதேவதிவ்யமஹிஷீம், அகிலஜகந்மாதரம், அஸ்மந்மாதரம், அசரண்யசரண்யாம், அநந்யசரண: சரணம் அஹம் ப்ரபத்யே''*

சரணாகதி கத்யத்தின் மேற்கண்ட முதல் சூர்ணிகையில், "பகங்களாகிய ஆறு குணங்களை உடைய பகவான் ஸ்ரீமந்நாராயணனுக்கு மிகவும் பொருத்தமான பட்டமகிஷியாக அநேக திருக் கல்யாண குணங்களை உடையவளாகவும், தாமரை மலரில் எழுந்தருளி இருப்பவளாகவும், அகில உலகங்களுக்கும் தாயாகவும், அடியேனுடைய திருத்தாயாராகவும், திக்கற்றவர்களுக்குச் சரணம் அளிப்பவளாகவும் உடைய ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயே, வேறு புகலிடம் எதுவுமில்லாத அடியேன் உன்னையே தஞ்சமென அடைகின்றேன்'' என்று மிகவும் உருக்கமாகக் கூறுகின்றார்.

*''பாராமார்த்திக பகவச்சரணாரவிந்தயுகள...''* என்று தொடங்கி, *''அசேஷ சேஷதைகரதிரூப நித்யகைங்கர்ய ப்ராப்த்யபேக்ஷயாபாரமார்த்திகீ, பகவச்சரணாரவிந்தசரணாகதி: யதாவஸ்திதா அவிரதா அஸ்துமே''* என்று முடியும் இரண்டாவது சூர்ணிகையில், எம்பெருமான் திருவடிகளில் அசையாத பக்தியும், அதன் விளைவாக பரபக்தி, பரஜ்ஞானம், பரமபக்தி ஆகியவை வாய்க்கப்பெற்று, அந்த எம்பெருமானுக்கு நித்ய கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும் பெரும்பேற்றைத் தவிர வேறு ஒரு பலனையும் எதிர்பாராத தம்முடைய சரணாகதி பலிக்க வேண்டும் என்று பிராட்டியிடம் வேண்டிக்

கொள்கிறார் நம் உடையவர். அதற்கு பதிலளிக்கும் தாயார், "அப்படியே ஆகட்டும்!" என்றும், "இந்தச் சரணாகதியினால் சகலமும் சித்தியாகும்!" என்றும் ஆசிர்வதிப்பதாக மூன்றாவது, நான்காவது சூர்ணிகைகள் அமைந்துள்ளன.

பிராட்டியின் ஆசியையும் அனுமதியையும் பெற்றுக் கொண்ட ஸ்ரீராமாநுஜர், அடுத்ததாக வரும் ஐந்தாவது சூர்ணிகையில் நேரடியாக எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளில் தம்முடைய சரணாகதியை விண்ணப்பம் செய்கின்றார்.

மிகவும் நீண்டதாக அமைந்த அந்தச் சூர்ணிகையில், பகங்கள் எனப்படும் ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் ஆகிய ஆறு பெருங்குணங்களைப் பெற்றுள்ளதால் பகவான் என்று அழைக்கப்படத் தகுந்தவனாக உள்ள எம்பெருமானின் திவ்ய மங்களஸ்வரூபம், திவ்யாயுதங்கள், நித்ய ஸூரிகளால் செய்யப்படும் கைங்கர்யங்களை ஏற்றருளும் தன்மை, சகல ஜீவராசிகளுக்கும் அருளும் தன்மை ஆகியவற்றை விசேஷமாக விவரித்துத் தம்முடைய சரணாகதியை ஏற்றுக் கொள்ளும்படி மிகவும் உருக்கமாக விண்ணப்பம் செய்கின்றார். மேலும், ஸ்ரீமஹாலக்ஷ்மிதாயார், தன்னுடைய சௌந்தர்யத்தாலும், விசேஷமான கல்யாண குணங்களாலும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுடைய திருவுள்ளத்தை உகப்பிப்பதுடன், அவனுக்கு ஏற்ற பொருத்தமான திவ்ய மகிஷியாகப்பிராட்டி விளங்குவதையும் இதே சூர்ணிகையில் உள்ளார்ந்த பக்தியுடன் எடுத்துக் கூறுகின்றார்.

ஸ்ரீரங்க கத்யத்தில், முதல் சூர்ணிகையில் ஸ்ரீரங்கநாதப் பெருமாளின் பகங்கள் உள்ளிட்ட குணங்களையும் விவரித்து அப்பெருமானுக்கு என்றென்றும் தொண்டு புரியும் சேஷபூதராக விளங்க வேண்டும் என்னும் பேரவாவினை வெளிப்படுத்துகின்றார் ஸ்ரீராமாநுஜர்.

இரண்டாவது சூர்ணிகையில் கர்மபந்தத்தினாலும், எம்பெருமானின் மாயையினாலும் வசப்பட்டு எண்ணற்ற பிறவிகளை எடுத்து ஸம்ஸாரக் கடலில் விழுந்து தத்தளிக்கும் ஜீவாத்மாக்களைக் கரையேற்றவல்லவையாகிய ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளிடம் தஞ்சம் புகுகின்றார்.

**ஸ்ரீராமாநுஜர் 2வதாக தாம் அருளியுள்ள ஸ்ரீரங்க கத்யத்தில், திருவரங்கம் பெரிய திருக்கோயிலில் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் தம்முடைய சரணாகதியைச் சமர்ப்பிக்கின்றார்."ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாரின் நாயகனாக இருப்பதே ஸ்ரீமந்நாராயணனுக்குப் பெருமை தரக்கூடியது" என எடுத்துரைக்கின்றார்.**









**அன்னப்பிரசாத மையம்**

**தானத்தில் சிறந்தது அன்னதானம். எவரானாலும் "போதும்" என்று சொல்லும் ஒரே தானம் "அன்னதானம்". திருமலையில் நித்ய அன்னதானம் நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. தி.தி.தே. திருச்சானூரிலும் பக்தர்களுக்காக அன்னப்பிரசாத மையத்தை ஏற்படுத்தி, அன்னையின் அருளால் நேரத்திற்கு உணவு பரிமாறி பக்தர்கள் பலருடைய பசியை ஆற்றி வருகின்றது.**

இவ்விரண்டாவது கத்யத்தின் இரண்டாவது மற்றும் ஏழாவது சூர்ணிகைகளில் "ஸ்ரீமந்" என்று எம்பெருமானை விளிக்கும் ஸ்வாமி எம்பெருமானார், "ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாரின் நாயகனாக இருப்பதே ஸ்ரீமந்நாராயணனுக்குப் பெருமை தரக்கூடியது என்பதையும், பிராட்டியுடன் கூடிய அந்த எம்பெருமானையே நாம் தஞ்சமடைய வேண்டும்" என்பதையும் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

**மூன்றாவதாக வரும் வைகுண்ட கத்யத்தில்...**

"வந்தவர் எதிர்கொள்ள மாமணி மண்டபத்து அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தமை" என்று ஸ்வாமி நம்மாழ்வார் விவரிக்கின்ற பேரின்ப வீடாகிய வைகுண்டத்தையும், அதன் செல்வச் செழிப்பையும், வைரவைடூரியங்களினால் அலங்கரிக்கப்பட்டுள்ள மண்டபங்களையும், நறுமணம் கமழும் நந்தவனங்களையும் கொண்டுள்ள அந்த திவ்ய லோகத்தில் திருமாமணி மண்டபத்தில் ஆதிசேஷனாகிய சிம்மாசனத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாருடன் வீற்றிருந்தபடி நித்யர்கள், முக்தர்கள் ஆகியோரின் கைங்கரியங்களை மனமுவந்து ஏற்றுக் கொண்டு அனுக்கிரகம் பொழியும் எம்பெருமானின் ராஜாங்கத்தை நம் கண் முன்பாகக் கொண்டு வந்து நிறுத்துகின்றார் ஸ்ரீராமாநுஜர்.

முக்தியை அடைய விழைகின்ற அடியவர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் நிலவும் இந்தப் புனிதச் சூழலையே தியானித்து, அவ்வெம்பெருமானின் திருவடித் தாமரைகளில் தங்களின் சிரங்களில் படிந்திருப்பதாகக் கற்பனை செய்து தஞ்சமடைய வேண்டுமென்று நன்னெறிப்படுத்தும் ஸ்ரீராமாநுஜர், அந்த திவ்ய லோகத்தில் ஆதிசேஷன் என்னும் சிம்மாசனத்தில் எம்பெருமானுடன் வீற்றிருந்து அருள் புரியும் ஸ்ரீமஹாலக்ஷ்மியே அவ்வைகுண்டலோகத்தின் அளவிட முடியாத ஐச்வர்யங்கள் அனைத்திற்கும் காரணமாக விளங்குபவள் என்றும், அத்தாயார் எம்பெருமானுக்கு சகல விதங்களிலும் பொருத்தமானவள் என்றும், நித்யசூரிகள், முக்தர்கள் ஆகியவர்கள் எம்பெருமானுக்கு நிறைவான தொண்டு புரிவதற்கு ஏற்ற உத்தரவுகளை அப்பிராட்டியே பிறப்பிப்பதாகவும் சிறப்பித்துக் கூறுகின்றார்.

ஸ்ரீவைஷ்ணவர்கள் பிராட்டியை "புருஷகாரி" என்று அழைப்பது வழக்கம். தன்னுடைய குழந்தைகளாகிய ஜீவாத்மாக்களுக்காக எம்பெருமானிடம் பரிந்து பேசிப் பலவிதமான நலன்களையும் கிடைக்கச் செய்வதே "புருஷகாரத்துவம்" ஆகும்.

"தன்னுடைய உயர்குணங்களால் எம்பெருமானுக்கும் ஏற்றம் அளித்து, தன்னுடைய தனிப்பெரும் கருணையினால் ஜீவாத்மாக்களுக்கும் எண்ணற்ற நன்மைகளைப் புரியும் பிராட்டியைப் போற்றி அவளுடைய திருவடிக் கமலங்களில் சரணமடைந்த பின்பே எம்பெருமானிடம் எந்தக் கோரிக்கையையும் வைக்க வேண்டும். அதுவே நாம் உய்வதற்கு உகந்த வழி" என்று ஸ்ரீராமாநுஜர் இயற்றியருளிய கத்யத்ரயம் வெளிப்படுத்தும் பேருண்மையை உணர்ந்து இம்மையிலும் மறுமையிலும் பேரின்பம் பெறுவோமாக!



# மங்கலம் தரும் மஹாலக்ஷ்மி

- முகுந்தகிரி டாக்டர் ஸ்ரீ.உ.வே.
அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி,
சென்னை

மஹாலக்ஷ்மி என்றாலேயே மங்கலம் தான். செல்வத்திற்கு மட்டுமின்றி அறம், பொருள், இன்பம், வீடு என அனைத்தும் இவளின் இன்னருள் ஒன்றினாலேயே அடைகிறோம். நமக்கு எல்லா பலன்களையும் அருளுபவன் எம்பெருமான் என்பதை சாஸ்த்ரங்கள் நன்கு தெளிவுறுத்துகின்றன. தோஷம் எனும் குறை ஏதுமில்லாத கோவிந்தன் அவன். அத்தகைய அவனுக்கே மகிமையளிப்பவளாகவும், திருமால் என்று தனது சம்பந்தத்தினால் பெயரைக் கொண்டவனாகவும் விளங்கச் செய்பவள் மஹாலக்ஷ்மி.

ஸ்ரீநிவாஸன் என்பதற்கு என்ன பொருள்? ஸ்ரீ என்பது இவளின் மகிமை மிக்க திருநாமம். இவளோ வேரி மாறாத பூ மேல் விளங்கும் அலர்மேல் மங்கை. அத்தகையவள் அவனது திருமார்பினில்தான் அமர்ந்துறைகிறாள் என்பதால் அவன் பெருமாள் ஸ்ரீநிவாசஸன் (திருமகள் உறை மார்பன்) என்றே பக்தர்களால் கொண்டாடப்படுகிறான் அன்றோ!

இவ்வளவு பெருமை பெற்றவளின் திருக்கல்யாண குணங்களைப் பாடும் பல ஸ்தோத்திரங்கள் உள்ளன. ஸ்ரீஸூக்தம் எனும் வேத பாகத்தை அடியொற்றியே அவற்றின் அர்த்தங்களை விளக்கும் அழகிய ஸ்தோத்திரங்கள் உள்ளன. ஸ்ரீஸூக்தம் எனும் வேத பாகத்தை அடியொற்றியே அவற்றின் அர்த்தங்களை விளக்கும் அழகிய ஸ்தோத்ரங்களை நமது ஆசார்யர்கள் அருளிச் செய்துள்ளனர். முதன் முதலில் ஆளவந்தார் அருளிய சதுச்லோகீ எனும் நான்கே சுலோகம் கொண்ட ஸ்தோத்ரம் நான்கு வேதங்களின் ஸாரம் என்பர் பெரியோர். பின்னர் பகவத் ராமாநுஜர் கத்யம் எனும் நூலில் அருளிய ஸ்ரீப்ரபத்தி, அவரது சீடர் கூரத்தாழ்வான் இயற்றிய ஸ்ரீஸ்தவம், அவரின் புதல்வர் பராசர பட்டரின் ஸ்ரீகுணரத்ன கோசம், சுவாமி வேதாந்த தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீஸ்துதி முதலிய ஸ்தோத்ரங்கள் இவற்றினுள் இன்றியமையாதவை.

அவற்றினுள் ஸ்ரீபராசரபட்டர் இயற்றியுள்ள ஸ்ரீகுணரத்ன கோசம் எனும் அத்புத ஸ்தோத்ரத்தின் அர்த்தம் ஒன்றை அனுபவிக்கலாம். “ஸ்ரீ” என்றால் மஹாலக்ஷ்மி. குணம் என்றால் அவளின் திருக்கல்யாண குணங்கள். கோசம் என்றால் பேழை – பெட்டி என்பது பொருள். தாயாரின் பெருமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள அழகிய பேழை என்பதால் இந்நூல் இப்பெயரைக் கொண்டுள்ளது.

இந்நூலை அரங்கன் திருமுன்பு அரங்கேற்றம் செய்கிறார் ஸ்ரீபராசரபட்டர். பிராட்டியின் பெருமை கேட்டு இன்புறும் இனியனன்றோ அவன். அந்த சமயம் பெருமாளுக்கும், பட்டருக்கும் நடைபெற்ற உரையாடலை சுவைபடத் தருகிறார். நாமும் அனுபவித்து இன்புறலாம்.

பட்டர் – திருவுக்கும் திருவாகிய திருவரங்கனே! மெய் நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பம்.

ரங்கன் – என்ன பட்டரே! உமது மகிழ்ச்சிக்கு யாது காரணம்?

பட்டர் – ரங்கா! உனது நாயகியான ரங்க நாயகியைப் பற்றிய அழகிய ஸ்தோத்திர நூல் ஒன்றினை இயற்றியுள்ளேன். அதனைத் தங்களின் திருமுன்பு அரங்கேற்றம் செய்திட அனுமதி தந்தருள வேண்டும்.

ரங்கன் – திருமகள் துதி என்றால் நீ அவளிடம் அன்றோ சொல்ல வேண்டும்.

பட்டர் – அரங்கா! உன் பெருமையை அவளிடம் கேட்டு ஆனந்திப்பதும், அவள் தன் பெருமையை நீ கேட்டு மகிழ்வதும் தானே என்றும் நிகழ்வது. அதனால் வந்தேன்.

ரங்கன் – (அகமகிழ்ந்து) ஓ அப்படியா! சரி அந்தத் துதியைப் பாடு.

பட்டர் – ரங்க விபோ! மற்றொரு விண்ணப்பம். இந் நூலில் அவள் (ரங்க நாயகி) உன்னை விடச் சிறந்தவள் எனப் பாடியுள்ளேன். ஆகையால் உனது ரசனையை நீ நன்கு வெளிப்படுத்த வேண்டும்.

ரங்கன் – ஓய் பட்டரே! இதென்ன புது வகையான நிபந்தனை. சரி சரி. நான் ரசிக்கிறேன் என்பதை நீ எவ்விதம் அறிவாய்?

பட்டர் – திருவின் மணாளா! பிராட்டியின் மகிமை தனை பாடப்பாட நீ அவள் மீது கொண்ட காதலால் நெஞ்சம் விம்மி பூரிப்படை வாயல்லவா! அப்போது உனது திருமார்பு தங்கக் கவசம் படீரென்று வெடித்து விழும். உடனே நான் மற்றொரு புதிய தங்க கவசம் சாற்றி மீண்டும் அவள் தம் புகழ் பாடுவேன். அப்போது மற்றொன்றும் வெடித்திடும். இவ்விதம் நீ பூரிப்படைய, பூரிப்படைய நூற்றுக்கணக்கான கவசங்களைச் சாற்றி மஹாலக்ஷ்மியின் மகிமை பேசுவேன்.

இப்படி ரங்கநாதன் அகமகிழ்ந்து கேட்ட அந்தச் சுலோகம், இதோ...

*ச்ரிய: ஸ்ரீ: ஸ்ரீரங்கேசய தவச ஹ்ருத்யாம்*
*பகவதீம்*
*ச்ரியம் த்வத்தோபி உச்சை: வயம் இஹ*
*பணாம: ச்ருணுதராம்*
*த்ருசௌ தே பூயாஸ்தாம் ஸுகதரளதாரே*
*ச்ரவணத:*
*புந: ஹர்ஷ உத்கர்ஷாத் ஸ்புடது புஜயோ:*
*கஞ்சுகசதம்*

– ஸ்ரீகுண ரத்ன கோசம் –9

நம் அலர்மேல் மங்கையின் பஞ்சமி தீர்த்தம் நடைபெறும் இந்நல்லதொரு மஹோத்ஸவ சமயம் நாமும் மங்கல தேவதையின் மகிமைபாடி மனம் மகிழலாம்.

## புஷ்பயாகம்

**பிரம்மோற்சவம் முடிந்த மறுநாள் புஷ்ப யாகம் செய்யப்படுகிறது. அதில் புஷ்பங்களாலேயே யாகமாக எல்லாவித மலர்களாலும் கூடை கூடையாக ஐந்து டன்களுக்கும் மேலாக ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு பாதாதி கேசம் வரை சேர்ப்பார்கள். தேவர்கள் பூமாரிப் பொழிவது போன்றிருக்கும், "தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது..." இந்த புஷ்ப யாகத்தைச் செய்தால் போய பிழையும் தீயினில் தூசாகும்.**



# செல்வத்தை அள்ளித்தரும் மஹாலக்ஷ்மி அஷ்டகம்

– முனைவர் ஆ.செந்திலாண்டவன்,
சென்னை, 94445 82856.

நமது வாழ்க்கைக்கு வேண்டிய பொருளாதாரத்தை நாம் பல்வேறு பணிகள் செய்து சம்பாதிக்கின்றோம்! பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை; அருளில்லாதார்க்கு அவ்வுலகம் இல்லை" என்பது மக்கள் வழக்கு! ஆகவே அறநெறிப்படி சம்பாதிக்கும் பணமே நமது வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்து, நம்மை உயர்ந்த நிலையில் வைக்கும்! திருவள்ளுவரும் ***"செய்க பொருளை"*** என்றார். ஔவையாரும், ***"பொருள்தனைப் போற்றி வாழ்"*** என்றார்.

"பொருளாதாரத்தை" மஹாலக்ஷ்மி என்று அழைக்கும் வழக்கம் மக்களிடையே இருக்கின்றது. செல்வம் ஒரு வற்றாத நதியைப் போன்றது. அந்நதி ஓரிடத்திலேயே தங்காமல், தொடர்ந்து வேறு வேறு இடங்களுக்குச் சென்று கொண்டே இருக்கும். யார் யார் எல்லாம் சேமித்த பணத்தைத் தாமே அனுபவிக்காமல், பிறருக்கும் கொடுத்து வாழ்கிறார்களோ, அவர்கள் இடத்தில் செல்வம் மேலும் பெருகும்.

அம்மஹாலக்ஷ்மி கடாக்ஷம் நமக்குத் தொடர்ந்து கிடைத்திட, நாம் மஹாலக்ஷ்மியின் மனம் குளிரும்படி, வீட்டைத் தூய்மையாக வைத்துக் கொண்டு, காலை, மாலையில் வீட்டின் பூஜையறையில் நெய் விளக்கேற்றி, மஹா லக்ஷ்மி படத்தை அல்லது அஷ்ட லக்ஷ்மி படத்தை வைத்துத் தூப தீபம் காட்டி, நறுமண மலர்கள் சூட்டி, குறிப்பாக வெள்ளிக் கிழமையில் பால்பாயசம் மற்றும் பழவகைகள், உலர் பழங்கள் வைத்து நிவேதனம் செய்து, "மஹாலக்ஷ்மி அஷ்டகம்" தோத்திரத்தைப் பாராயணம் செய்தால், ஒருவருக்கு உறுதியாக மஹாலக்ஷ்மியின் கருணாகடாக்ஷம் பூரணமாகக் கிடைக்கும் என்பது, பாரதப் பண்பாடு!



### மஹாலக்ஷ்மி அஷ்டகம்

எட்டுப் பாடல்கள் கொண்டது அஷ்டகம் எனப்படும். இரண்டிரண்டு வரிகளாக வருவது, இந்திரனால், மஹாலக்ஷ்மியை வணங்கிப் போற்றிப் பாடிய இந்த நூல் "பத்ம புராணத்தில்" உள்ளது.

### படைப்பின் மூலகாரணம் மஹாலக்ஷ்மி

***"நமஸ்தேஸ்து மஹாமாயே
ஶ்ரீபீடேஸுரபூஜிதே
சங்கசக்ர கதாஹஸ்தே
மஹாலஷ்மி நமோஸ்துதே"***

மஹாலக்ஷ்மியே இவ்வுலகப் படைப்பின் மூல காரணமாக விளங்குபவள். ஸ்ரீ பீடத்தில் வைத்து தேவர்களால் வணங்கப்படுபவள். தன் அழகிய கரங்களில் சங்கு, சக்கரம், கதை முதலியவற்றை வைத்துக் கொண்டு இவ்வுலக உயிர்களைப் பாதுகாக்கின்றார். அம்மஹாலக்ஷ்மியை வணங்கிப் போற்றுகிறேன்.





# திருச்சானூரில் துலாபாரம்

ஒரு முறை சத்யபாமா ஸ்ரீகிருஷ்ணரை துலாபாரத்தில் அமரச் செய்து விலைமதிப்பில்லாத பொருட்களை வைத்தாலும் அந்த துலாபாரம் கொஞ்சமும் அசையக்கூட இல்லை. ருக்மிணி கிருஷ்ணரை துதித்து ஒரே ஒரு துளசி தளத்தை வைத்தாள். துலாபாரம் ருக்மிணியின் பக்தியால் ஒரேயடியாக கீழே இறங்கியது. இவ்வாறு துவங்கிய துலாபாரம் திருமலையில் மிகவும் சிறந்த முறையில் நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே. பக்தர்களின் விருப்பத்திற்கிணங்க திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதி தாயார் சன்னதியில் துலாபாரம் கடந்த ஆண்டு(2021) வரலக்ஷ்மி விரதம் அன்று தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு சிறப்பான முறையில் நடந்துக்கொண்டிருக்கிறது. நாம் திருமலைக்குச் சென்று துலாபாரம் செய்ய முடியவில்லை என்றால் திருச்சானூருக்குச் சென்று அங்கும் துலாபார காணிக்கையைச் செலுத்தலாம். ஏனென்றால் தாயார் தான் பெருமாளுக்கும் நமக்குமிடையே பாலமாக இருந்து நாம் செய்யும் பெரும் பாவத்தை சிறியதாக செய்தும், சிறிய புண்ணியச்செயலை பெரியதாக பெருமாளுக்கு தெரிவிக்கிறாள். அதனால் திருச்சானூரிலும் நாம் துலாபாரத்தை செலுத்தி நம் வேண்டுதலை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

### சகலபாவங்களையும் தீர்ப்பவள் மஹாலக்ஷ்மி

*''நமஸ்தே கருடாரூடே, கோலாசுர பயங்கரீ*
*ஸர்வ பாபஹரே தேவி, மஹாலக்ஷ்மி*
*நமோஸ்துதே''*

மஹாலக்ஷ்மியே கருட வாகனத்தில் எழுந்தருளி, கோலாசுரர்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பாள். நமது எல்லாவிதமான பாவங்களையும் நீக்குபவள் மஹாலக்ஷ்மி! அம்மஹாலக்ஷ்மியை வணங்குகிறேன்.

### வேண்டும் வரம் தருபவள் மஹாலக்ஷ்மி

*''ஸர்வக்னே சர்வ வரதே ஸர்வதுஷ்ட பயங்கரீ;*
*ஸர்வ துக்க ஹரே தேவி மஹாலஷ்மி*
*நமோஸ்துதே''*

இவ்வுலகில் நடந்தவை, நடப்பவை, நடக்கப்போபவை என்று எல்லாவற்றையும் அறிந்தவள் அவள். வேண்டும் வரங்கள் அனைத்தையும் வாரி வழங்குபவள் மஹாலக்ஷ்மி. துஷ்ட குணங்களை அழிப்பவளும், நமது துக்கங்களை அழிப்பவளும் அம்மஹாலக்ஷ்மியே. அத்தெய்வ மகளை வணங்குகிறேன்.

### மந்திரங்களின் சூட்சும வடிவம் மஹாலக்ஷ்மி

*''ஸித்தி புத்தி ப்ரதே தேவி, புத்தி முக்தி*
*ப்ரதாயினி*
*மந்த்ரமூர்த்தே ஸதாதேவி, மஹாலஷ்மி*
*நமோஸ்துதே''*

நாம் நம் வாழ்க்கையில், சாதனைகள் புரிந்து, நல்ல முறையில் வாழ, நல்ல புத்தியை அளிப்பவளும், இந்த உலகில் சகல விதமான பேறுகளையும் பெற்று வாழ்ந்து, அவளது திருவடித் தாமரைகளை அடைய அருள்பவளும், மந்திரங்களின் சூட்சும ஸ்வரூபமாக விளங்குபவளுமான மஹாலக்ஷ்மியை வணங்குகிறேன்.

### ஆதியந்தம் இல்லாத மஹாலக்ஷ்மி

*''ஆத்யந்த ரஹிதே தேவி, ஆதிசக்தி*
*மஹேஸ்வரி*
*யோகக்ருத யோக ஸம்பூதேவி, மஹாலக்ஷ்மி*
*நமோஸ்துதே''*

ஆதியும் அந்தமும் இல்லாதவளும் சகல விஷயங்களுக்கும் மூலாதாரமாக இருப்பவளும், யோகமாகப் பிறந்தவளும், யோகத்தால் இணைந்தவளும் ஆகிய மஹாலக்ஷ்மியை வணங்குகிறேன்.

**புற-அகக்கண்களுக்கு ஆதார சக்தி**

*"ஸ்தூல ஸுட்சும மஹாரௌத்ரே மகாசக்தி மஹோதரே;*
*மஹாபாப ஹரே தேவி: மஹாலஷ்மி நமோஸ்துதே"*

அனைத்துச் செயல்களுக்கும், பொருள்களுக்கும் பின்னால் சூட்சும வடிவத்தில் ஆதார சக்தியாக விளங்குபவளும், கோர பயங்கர வடிவத்தில் ருத்ரணியாக விளங்குபவளும், மிகப் பெரிய சக்தியின் பிறப்பிடமாக விளங்குபவளும், அனைத்துப் பாவங்களையும் அழிப்பவளுமாகிய மஹாலக்ஷ்மியை வணங்குகிறேன்.

**பிரபஞ்சத்தின் தாய் மஹாலக்ஷ்மி**

*"பத்மாஸன ஸ்திதே தேவி, பரப்பிரம்ம ஸ்வரூபிணீ*
*பரமேஸி ஜகன்மாத: மஹாலக்ஷ்மி நமோஸ்துதே"*

தாமரை ஆசனத்தில், சாந்தம் தவழும் முகத்துடன் அமர்ந்திருப்பவளும், உயர்ந்த ப்ராமணியாக விளங்குபவளும், இப்பிரபஞ்சத்தின் உயரிய கடவுளாக, தாய்மைத் தெய்வமாக விளங்குபவளுமாகிய மஹாலக்ஷ்மியை வணங்குகிறேன்.

**தூய்மையின் வடிவே மஹாலக்ஷ்மி**

*"ஸ்வேதாம்பரதரே தேவி, நானாலங்கார பூஷிதே*
*ஜகத்ஸ்திதே ஜகன்மாதா, மஹாலஷ்மி நமோஸ்துதே!"*

தூய்மையின் அம்சமான அடையாளமான, வெள்ளை உடையை அணிந்திருப்பவளும், பலவிதமான, பொன்னாலான, நவரத்தினங்களான ஆபரணங்களை அணிந்திருப்பவளும், பிரபஞ்சத்தின் தாய்க்கும் தாயாகக் காப்பவளுமான மஹாலக்ஷ்மியை வணங்குகிறேன்.



## மஹாலக்ஷ்மி அஷ்டகத்தைப் படிப்போருக்கு ஏற்படும் பயன்கள்

*"மஹாலக்ஷ்மி அஷ்டக ஸ்தோத்ரம்ய: படேத் பக்திமான்நர:*
*ஸர்வஸித்தி மவாப்னோதி ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா*
*ஏக காலம் படேந் நித்யம் மஹாபாப விநாஸனம்*
*த்வி காலம் ய: படேந் நித்யம் தன தான்ய ஸமன்வித:*
*திரிகாலம் ய: படேந் நித்யம் மஹாசத்ரு விநாஸனம்*
*மஹாலக்ஷ்மிர் பவேந் நித்யம் ப்ரஸன்ன வரதா ஸுபா"*

- மஹாலக்ஷ்மி அஷ்டகத்தை பக்தியுடன் பாராயணம் செய்வோர் எல்லா விதமான செல்வங்களையும் பெறுவார்கள்.
- தினமும் ஒரு முறை கூறினால் அனைத்துப் பாவங்களும் தீரும்.
- தினமும் இருமுறை கூறினால் தனங்கள், தான்யங்கள் பெருகும்.
- தினமும் மூன்று முறை கூறினால் நமது எதிரிகள் அழிவார்கள்.
- ஆகவே, மஹாலக்ஷ்மி அஷ்டகத்தை நாள்தோறும் பாராயணம் செய்து, அஷ்ட ஐச்வர்யங்களையும் பரிபூரணமாகப் பெற்று, வாழ்வாங்கு வாழ்வோம்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 76

**இடமிருந்து வலம்**

1. வேண்டியதைத் தருகின்ற திருக் கடித்தானம் தாயார்....(7)
3. தஞ்சை மணிக்குன்றப் பெருமாளின் மனையாட்டி....(7)
5. திருக்கூடலூரில் மலர் பெயரைக் கொண்ட வல்லி ....(6)
9. காஞ்சி திரு ஊரகத்தில் உலகளந்த பெருமாளுடன் இணைந்த நாச்சியார்......(6)
13. திருப்புல்லாணியில் திருமண வல்லியாகத் தாயார்......(7)

**வலமிருந்து இடம்**


2. காஞ்சியில் பவள வண்ணனின் துணைவியாய் நவரத்தினங்களில் ஒன்றான வல்லி....(6)
9. திருக்கண்ண மங்கை க்ஷேத்திரத்தில் திருமஞ்சனத்தின் பெயர் கொண்டத் தாயார்.......(7)
10. திருநின்றவூரில் ஸ்ரீராமரின் பத்தினி பெயருடன் வல்லி.......(5)
12. திருஅரிமேய விண்ணகரத்திலும் திருவாலி திருநகரிலும் தாயாரின் பெயர்........(9)
15. திருவெள்ளியங்குடி, காஞ்சி திருத்தண்கா, திருபுட்குழி, திருவட்டாறு தாயார்கள் பெயர் ........(4)வல்லி.

**மேலிருந்து கீழ்**

1. திருஎவ்வுள் திருத்தலத்தில் அருளாட்சிப் புரிகின்ற தங்கவல்லி....(6)
2. திருப்பிருதி ஜோஷிமட தலத்தின் நாயகி வாசமுள்ள வல்லி......(7)
3. காஞ்சி திருக்கள்வனூரில் நாச்சியார்.....(7)
4. திருவல்லிக்கேணி திவ்ய தலத்தில் திருமறையார்.....(5)
5. திருப்பதியிலும், தில்லையிலும் கோவிந்தராஜ ஸ்வாமியின் இணை இவரே....(8)
6. குடந்தை, காஞ்சி, திருவெஃகா, திருவிடந்தை தலங்களில் இவரே......(6)
7. பரமபதவல்லி.....(7)
9. பத்ரிநாத் க்ஷேத்திரத்தில் நறுமணமுள்ள .....(5)வல்லி


**கீழிருந்து மேல்**

8. திருமோகூரில் மனங்கவரும் .....(3)வல்லி
9. திருஅன்பில் சௌந்தர்ய வல்லி......(7)
11. திருக்கோளூரில் கமல மலரான .....(3)வல்லி
12. சிங்கப்பெருமாள் நாச்சியார்.....(7)
13. திருச்சி திருக்கோயில் தாமரையான வல்லி நாச்சியார்.....(6)
14. திருக்கபிஸ்தலத்தில் தாயார்.....(7)
15. பெரியாழ்வார் பல்லாண்டு பாடிய திருக்கூடல் (மதுரை) மாநகரில் அருளாட்சி புரிகின்றத் தாயார்......(6)



தொகுப்பு :
திரு. டி.ஆர்.மனோகர்
தஞ்சாவூர். 99426 44807

புதிருக்கு விடை அறிய
43ம் பக்கம்
பார்க்கவும்...



# தாயாரின் கருணையும் ஸ்ரீஸ்துதியும்

பாசத்தில் சிறந்தது தாய் பாசம், தவறு செய்யும் தனது குழந்தையைக் கணவரிடம் காட்டிக் கொடுத்து அவனால் தண்டனை பெறுவதை தவிர்க்க எப்படி ஓர் சாதாரணத்தாய் முயலுவாளோ அதுபோல "உலகத்திற்கே தாயான மஹாலக்ஷ்மி" நம் பாபங்களை மன்னிப்பதோடு அல்லாமல் திருமாலிடம் நமக்காக நாம் செய்யும் மலையளவு பாவத்தை கடுகளவாகக் காட்டியும், கடுகளவு நல்ல செயலை மலை போல் காட்டியும் நமக்கு நன்மை செய்யுமாறு பரிந்துரைக்கிறாள். இதையே "புருஷகாரம்" என்பர் பெரியோர்.

ஸ்ரீமஹாலக்ஷ்மியின் தாய்மை குணத்திற்கு அளவே கிடையாது. தாய்மைக்கே உண்டான கருணையோடு நம் ஒவ்வொருவரையும் எப்பொழுதும் காக்கிறாள். தன் பக்தியாலும் பேரன்பினாலும் எம்பெருமானின் சீற்றத்தை முற்றிலும் நீக்கி அவரை அருள் புரிய வைக்கிறாள். இவ்வாறு பக்தர்களுக்கும் எம்பெருமானுக்கும் இடையே ஒரு பாலமாக பிராட்டி செயல்படுவதை விளக்குவதே "ஸ்ரீ" என்கிற திருநாமம். "லக்ஷ்மி" எனும் சொல் அனைவரையும் தனது குளிர்ந்த பார்வைக்கு இலக்காக்குபவள் என்று பொருள்படும்.

பாற்கடல் அரசனுக்கு மகளாகத் தோன்றி, பாற்கடலை கடையும்பொழுது அதிலிருந்து ஐராவதம், காமதேனு, சந்திரன், கற்பக விருக்ஷம், அமிர்தம் வெளிவந்தபோது ஸ்ரீலக்ஷ்மியும் பூமாலையோடு வந்து திருமாலை மணந்து கொண்டதால் அன்று முதல் திருமால் லக்ஷ்மி நாராயணன், லக்ஷ்மி நரசிம்மர், லக்ஷ்மி ஹயக்ரீவர் என்ற போற்றுதலுக்குண்டானார். செல்வத்துக்கு அதிபதியாகவும், அதை கொடுப்பவளாகவும் திகழ்பவள் மஹாலக்ஷ்மியே.

விஷ்ணு புராணம், வாயு புராணம், பத்ம புராணம் முதலியவைகள் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் பெருமைகளை எடுத்துக் கூறுகின்றன. ரிக்வேதம் "ஸ்ரீஸூக்த"

- திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்,
அம்பத்தூர், 99529 29685.



த்திலும், கூரத்தாழ்வான் தன் "ஸ்ரீ ஸ்தவ"த்திலும், ஸ்ரீதேசிகர் "ஸ்ரீஸ்துதி"யிலும், ஆளவந்தார் "சதுச் லோகி"யிலும், ஆதிசங்கரர் "கனகதாரா ஸ்தோத் திர"த்திலும் ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயாரைப் போற்றி துதிக்கிறார்கள். தாயாரை போற்றி துதிக்காத வர்களே கிடையாது எனலாம்.

இனி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் ஒரு ஏழைப் பிரம்மசாரியின் கல்யாணத்திற்காக "ஸ்ரீஸ்துதி" செய்து பொன்மழை பொழிவித்ததை காண்போம். 25 சுலோகம் கொண்ட ஓர் அற்புத நூல். ஒவ்வொரு சுலோகமும் தாயாரின் பெருமைகளை அள்ளி வீசுகிறது.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே சுந்தராங்க தன் என்றால் அவரது திருமார்பில் வீற்றிருந்து அவரது பேரழகினை இன்னும் அழகூட்டுகிறாள் தாயார். நீருண்ட கார்மேகத்தின் நடுவில் மின்னல் ஒளிர்வது போல, நீல மேகச்யாமளனின் திருமார்பில் செந்தாமரை நிறத்தினாளான லக்ஷ்மி "ஸ்ரீவத்ஸம்" என்கிற மருவைப் பீடமாகக் கொண்டு அமர்ந்து எம்பெருமானின் திருமேனிக்கு அழகையும், சோபையையும் சேர்க்கிறாள் என்பதைத் தான் ஸ்வாமி தேசிகன் தாயாரைக் குறித்து அருளிய "ஸ்ரீஸ்துதியில்" விளக்குகிறார்.

சுலோகம் –1ல் மது என்னும் அசுரனை வெற்றி கொண்டு மங்களப் பொருட்களுக்கு மங்களத் தன்மையை அளிப்பவள், பெருமாளின் திருமார்பில் தனது ஒளியால் அழகுறச் செய்பவள், இம்மை, மறுமைகளைச் சேர்ந்த செல்வங்களை வேண்டு கின்ற மக்களுக்கு நன்மையை வடிவாகக் கொண்டு சரண் அடைந்தவர்களை காப்பவளாய், ஸ்ரீ என்கிற திருநாமம் உடையவளாய் உள்ள உன்னை சரண் அடைகிறேன் என்கிறார் தேசிகன்.

சுலோகம்–2ல் திருபாற்கடலில் அவதரித்தவ ளும், யாக சாலையிலும், தாமரையிலும், திருமால் திருமார்பில் உடையவளும் ஸ்ரீவைகுண்டத்து செல்வ நாயகியை எல்லையற்ற குணங்களை உடைய ஸ்ரீமஹாலக்ஷ்மியைத் துதிக்கிறார்.

ஸ்ரீஸ்துதி 8ல் லக்ஷ்மி, பத்மா, கடலின் புதல்வி, விஷ்ணு பத்னி, இந்திரை என்று வேதங்களுக்கு மூலதனமாய் உள்ள திருநாமங்களை சொல்வதால் பாபங்கள் நீக்கி இனி பிறவி இல்லாமல் இருக்க



## திருச்சானூரில் ஸ்ரீவரலக்ஷ்மி விரதம்

ஸ்ரீபத்மாவதி தாயார் கொலுவிருக்கும் திருச்சானூர் ஆலயத்தில் ஸ்ரீவரலக்ஷ்மி விரதம் மிகச்சிறப்பான முறையில் வருடந்தோறும் தி.தி.தே. ஏற்பாடு செய்து நிகழ்த்தி வருகிறது. வரலக்ஷ்மி விரதத்தினன்று காலை நேரத்தில் தாயாரை சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் எழுந்தருளச் செய்து, கலச ஸ்தாபனம் செய்து ஆகம முறைப்படி வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த விரதத்தில் பக்தர்களாகிய நாமும் அதற்கான கட்டணம் செலுத்தி பங்கு பெறலாம். விரதபூஜை முடிந்த பின் மாலை நேரத்தில் சஹஸ்ர தீபாலங்கார சேவையும், நான்கு மாட வீதிகளில் தாயார் புறப்பாடும் நடைபெறும். அன்று அதிகாலை யில் மூலமூர்த்தியான தாயாருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். விரதத்தில் பங்கு கொண்டவர்களுக்கு பிரசாதமும் வழங்குவர்.



செய்பவளை இந்த பிரபஞ்சத்திற்கே ஈஸ்வரியாக இருக்கும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை நமஸ்கரிக்கிறோம்.

ஸ்ரீஸ்துதி 9ல் தாயே உனது மகிழ்ச்சிக்காக லீலைகள் புரிகின்ற எம்பெருமானிடமே நோக்கம் கொண்டு நிற்கின்ற வேதங்களின் கருத்தில் ஏறிய கணவனும் மனைவியுமாகிய நீங்கள் இருவருமே எங்களுக்கு பரதேவதையாக உள்ளீர்கள் எனப் போற்றுகிறார்.

ஸ்ரீஸ்துதி 12ல் தாயே! படைப்பு முதல் எங்கும் பரவிய சகலமான வாக்குகளின் உருவமும் எந்த சரஸ்வதிக்கு வசப்பட்டதோ, மேருமலையை வில் லாகக் கொண்ட சிவனுடைய புருவ நெறிப்பால், மலரை அம்பாகவுடைய மன்மதனுக்கு அடிமையா கின்றானோ, தேவேந்திரன் எப்பொழுதும் எந்த இந்திராணியிடத்தில் நூற்றுக்கணக்கான கண்களால் ஒரே இலக்கையுடையவனோ அந்தத் தேவிமார்களுக்கு இந்த பக்குவநிலை உன்னுடைய கருணையால் அல்லவோ வந்தது என்கிறார்.

ஸ்ரீஸ்துதி 22ல் தாயே! உன்னைச் சரணமடைந்த பிறகு அடியேனுக்கும் பல உயரிய மனநிலைகள் உண்டாகின்றன. என் சம்சார பயத்தை போக்குகிறது. எம்பெருமானிடம் பக்தியை மேலும், மேலும் வளரச் செய்கிறது. இத்தகைய பெரிய நன்மைகள் உன் கருணையால் தான் எனக்கு நீயாகவே அருள்கின்றாய். இப்படி இருக்க அடியேன் உன்னிடம் பிரார்த்தித்துப் பெறுவதற்கு வேறு என்ன இருக்கிறது? என்கிறார்.

ஸ்ரீஸ்துதி 25ல் வருகிற "சரசிஜ நிலையா" என்ற பெயர் திருச்சானூர் பத்மாவதி தாயாரை சுட்டிக் காட்டுகின்றன குரு பக்தியில் இருந்து தோன்றியது. அது இல்லாமல் ஸ்ரீதத்வத்தின் மேன்மையைக் காட்சிப்படுத்த முடியாது. இப்படியாக ஸ்ரீஸ்துதியில் தாயாரின் கருணையையும் மேன்மையையும் விவரிக்கிறார்.

சரணாகதிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஸ்ரீவைஷ்ணவம் திருமாலும் திருமகளும் சேர்ந் திருக்கையில் செய்யப்படும் சரணாகதியே பெருமை மிக்கது என்று கூறுகிறது. நாமும் இப்படிப்பட்ட பெருமைகள் வாய்ந்த பிராட்டியை சரணமாகப் பற்றுவோம். திருமாலின் கருணையைப் பெறுவோம்.



## லக்ஷ்மி காசுமாலை

**திருவேங்கடமுடையான் ஸ்ரீபத்மாவதி தாயாருக்காக லக்ஷ்மி காசுமாலையை பிரம்மோத்ஸவம் நடைபெறுகின்ற பொழுது அனுப்புவார். திருமலையில் இருந்து ஊர்வலமாக, அலங்காரங்கள் செய்த காசு மாலை கொண்டு வரப்படும். இந்த காசுமாலையை யானை வாகனத்திலும் மற்ற பல வாகனத்திலும் எழுந்தருளும் தாயார் அணிந்து திருவீதி உலா வருவதை காண பக்தர்கள் திரளாக வருவர்.**



# முதலாழ்வார்கள் போற்றும் திருமகள்

– திரு. ஏ.கே. கோபி,
கள்ளக்குறிச்சி,

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணன் இவ்வுலக மாந்தர்கள் அனைவரும் இகபர சுக வாழ்வினை எய்தும் பொருட்டு, அவர்களை திருத்திப் பணி கொள்ள ஆழ்வார்களை அவதரிக்கச் செய் தருளினார். ஆழ்வார்கள் பன்னிரு வரில் முதலாவதாக அவதரித்தவர் கள் முதலாழ்வார்கள் எனக் கொண்டாடப்படும் பொய்கை ஆழ் வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் மூவராவர்.

**முதலாழ்வார்கள்**

காஞ்சி மாநகரத்தில் திரு வெஃகா எனும் திவ்ய தேசத் திருக் கோயிலுக்கு அருகிலுள்ள பொற்றாமரை பொய்கையில் உள்ள தாமரைப் பூவில் ஐப்பசி மாதத்தில், ஸ்ரீவிஷ்ணுவின் திருநட்சத் திரமான திருவோணத்தில் செவ்வாய்க்கிழமையில் திருமாலின் பாஞ்சஜன்யமென்னும் திருச்சங்கின் அம்சமாக அவதரித்தார் பொய்கையாழ்வார்.

அடுத்த நாள் கடல்மல்லைத் தலசயனம் எனக் கொண்டாடப் பெறும் மகாபலிபுரத்தில் மல்லிகைப் புதரில் உள்ள நீலோற்பவ மலரில் அவிட்ட நட்சத்திரத்தில் புதன்கிழமை நன்னாளில் திருமாலின் கௌமோதகி எனும் கதையின் அம்சமாக பூதத்தாழ்வார் அவதரித்தார். அதற்கு அடுத்த நாள் சென்னையில் மயிலாப்பூரில் உள்ள ஆதிகேசவப் பெருமாள் கோயில் கிணற்றிலுள்ள செவ்வல்லி மலரில், சதய நட்சத்திரத்தில் வியாழக்கிழமை நன்னாளில் ஸ்ரீவிஷ்ணுவின் நாந்தகம் என்னும் வாளின் அம்சமாக பேயாழ்வார் அவதரித்தார். இம்மூவரையும் ஓரிடத்தாலே ஒன்றாக சேர்த்து திவ்ய தரிசனம் தந்தருளி "நாலாயிர திவ்யப் பிரபந்தம்" என்னும் தமிழ் வேத சாஸ்திரத்தை அடி எடுத்துக் கொடுத்து தோற்றுவிக்க எம்பெருமான் திருவுள்ளம் பற்றினார்.

முதலாழ்வார்கள் மூவரும் எம்பெருமானை சேவிக்கையில் பெருமாளின் வடிவழகு, திருக்கல்யாண குணங்கள், திவ்யாயுதங்கள், திருவாபரணங்கள், அவதாரலீலைகள், திவ்ய தேசங்களின் இயற்கை பேரழகு இவற்றை ஆழ்ந்து அநுபவிக்கும்போது புருஷகார பூதையான மஹாலக்ஷ்மியும் எம்பெருமானின் திருமார்பிலும் அருகிலும் காட்சித் தந் தருள திருமகளினையும் தம் முடைய பாசுரங்களில் போற்றி யருளியதை அனுபவிக்கலாம்.



## மலர் மகள்

அண்டப் பெருவெளியில் உள்ள அனைத்து சித், அசித் வஸ்துக்களையும் தம்முடைய திருமேனியில் தரித்துள்ளவன் எம்பெருமான். மேகக் கருமை நிறத் திருமேனியின் வலக்கையில் சக்கரமும், இடக்கையில் சங்கமும், வலது திருமார்பில் பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மியும், வேதங்களை கைகளிலே தாங்கிய பிரம்மா பகவானின் உந்தியில் முலைத்தெழுந்த தாமரையிலும், மூன்று திரிபுரங்களை எரித்த சிவபெருமானை பகவானின் திருமேனியிலும் தரிசித்த பொய்கையாழ்வார் பகவானின் திருமார்பில் பிராட்டி அகலகில்லேன் இறையுமென்று நித்ய வாசம் செய்தருளுவதைப் பாசுரமிடுகிறார்.

*கைய வலம்புரியும் நேமியும் கார்வண்ணத்*
*தைய மலர்மகள் நின்னாகத்தாள் - செய்ய*
*மறையான் நின் உந்தியான் மாமதிள் மூன்றெய்த*
*இறையான் நின் ஆகத்திறை*

## திருமகள்

திருப்பாற்கடலில் படம் விரித்த அழகிய ஆதிசேஷன் படுக்கையில் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி சகிதம் சேவை சாதிக்கிறான் எம்பெருமான். பாற்கடலின் அலைகள் பாம்பணையில் பட்டு தெறிக்கும் பாற் திவலைகள் எம்பெருமான் மீதும், பிராட்டியின் மீதும் பட்டு பரவசப்படுத்துகின்றன. திருமகளின் மீது அதீத காதல் கொண்ட எம்பெருமான் அதனை வெளிப்படுத்த மற்ற இரு தேவியரும் பெரிய பிராட்டியின் மேல் கொள்ளும் நேசமே தங்களின் மீதும் எம்பெருமான் கொள்வதாகவே பாவித்திருக்கின்றனர் என பெரிய பிராட்டியின் மேன்மையினைக் கொண்டாடுகிறார் பொய்கையாழ்வார்.

*திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால்*
*திருமகட்கே தீர்ந்தவாறேன் கொல்-திருமகள் மேல்*
*பாலோதம் சிந்தப் பட நாகணைக் கிடந்த*
*மாலோத வண்ணர் மனம்.*

## தாமரையாள்

உலகில் தோன்றிய ஆறுகள் அனைத்தும் சமுத்திரங்களை நோக்கியே பயணிக்கும். காலைக் கதிரவன் சரமதசையில் எமதர்மராஜனின் தீர்ப்பினை எதிர்பார்த்து காத்திருக்கும் பிறவாப் பெருநிலையான

# தங்கத் திருத்தேர்

**திருச்சானூரில் திருவேங்கடமுடையானின் பட்டத்துராணியான அலர்மேல் மங்கை தாயார் பிரம்மோத்ஸவத்தில் ஆறாம் நாள் மாலையில் நடைபெறும் தங்கத்திருத்தேர் மிகவும் சிறப்பு வாய்ந்தது. மாலை நேரத்தில் ஆதித்யனின் ஒளிக்கதிர்கள் தங்கத்திருத்தேரின் மீது பட்டு ஜொலிக்க, மாதர்கள் தங்கள் உள்ளத்தின் இதயராணியான வரங்களை அளிக்கும் வரலக்ஷ்மியான ஸ்ரீபத்மாவதி தாயாரின் திருத்தேரை நான்கு மாட வீதிகளில் வடம் பிடித்து இழுப்பது கண் கொள்ளாக் காட்சியாக அமையும். திருவீதிகளில் மங்கள வாத்தியங்களுடன், நடன கலைஞர்களின் நாட்டியத்துடன், பஜனை குழுவினரின் பஜனைகளுடன் ஸ்ரீபத்மாவதி தாயாரின் "ஜே ஜே" முழக்கத்துடன் தங்கத்திருத்தேர் நகர்ந்து வரும் அழகே அழகு!**



# பவித்ரோத்ஸவம்



**வருடம் முழுவதும் தெரிந்தோ, தெரியாமலோ நடக்கும் தவறுகளுக்கு பரிகாரமாக பாத்ரபத (ஆவணி) மாதத்தில் மூன்று நாட்கள் நடைபெறும் உத்ஸவம் பவித்ரோத்ஸவம். இந்த உத்ஸவத்தின் போது ஆலயம் சுத்தி செய்த பின்னர் ஆலத்தில் எழுந்தருளியுள்ள அனைத்து மூல மூர்த்திகளுக்கு பவித்திர மாலைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. அதனுடன் உற்சவ மூர்த்திகளுக்கும் பவித்திர மாலைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இந்த உத்ஸவம் அங்குரார்ப்பணத்துடன் தொடங்கி மூன்று நாட்கள் மிக விமரிசையாக நடைபெறுகிறது. இந்த உற்சவத்தின் ஒரு பாகமாக ஸ்ரீபத்மாவதி தாயார் திருவீதி உலா வருவது சிறப்பம்சமாகும்.**

மோட்சத்தினை குறிகொள்ளும் ஆத்மா மற்ற தத்துவங்களையோ, மற்ற தெய்வங்களையோ சார்ந்திராமல் சரணாகதிக்கு உகந்த அழகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் தலைவனான எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களிலேயே ஒன்றி, அவன் திருவடிகளில் சரணாகதி அனுஷ்டிக்கும் பிராட்டியோடு சேர்ந்த எம்பிரானே ஆத்மாக்களுக்கு விரைவில் வைகுந்தம் அளிக்க வல்லவன் என பிராட்டியின் புருஷகாரத்துவத்தை அறுதியிடுகிறார் பொய்கையாழ்வார்.

*பெயரும் கருங்கடலே நோக்குமாறு ஒண்பூ*
*உயரும் கதிரவனே நோக்கும் - உயிரும்*
*தருமனையே நோக்கும் ஒண்தாமரையாள் கேள்வன்*
*ஒருவனையே நோக்கும் உணர்வு.*

## நெடுமலராள்

அழகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் பெரிய பிராட்டியார் கருமைநிற வண்ணத் திருமாலின் திருமார்பிலே ஒரு கணமும் பிரியாமல் அடியார்களை உய்விப்பதற்காகவே நித்ய வாசம் செய்கிறாள். இராமாவதாரத்தில் இராவணனின் பத்து தலைகளையும் அறுத்து வீழ்த்திய எம்பெருமான், வாமன அவதாரத்தில் மகாபலியினை சம்ஹாரம் செய்யாமல் பாதாள லோகத்தில் அழுத்தி உயிர் தரிக்கச் செய்ததன் காரணத்தை யாரால் அறிய முடியும்? எனக் கருணையே வடிவெடுத்தவரான எம்பெருமானின் அவதார கால வைபவங்களின் தர்ம நியமங்களில் வியக்கிறார் பூதத்தாழ்வார். பிராட்டி அருகிலிருக்கையில் எம்பெருமானின் வாத்சல்யம், சௌலப்யம், சௌசீல்யம் முதலான குணங்கள் அதிகரித்திருப்பதால், அடியார்களின் குற்றத்தினை வெகுவாக கவனத்தில் கொள்ளாமல் மன்னித்தருள்கிறான். ஆந்ருசம்ஸ்யம் எனும் தயை எனும் குணம் பெருகியதாலேயே மஹாபலி பாதாள லோகத்தில் உயிருடன் தள்ளப்பட்டான். பிராட்டி அருகில் இல்லாததாலேயே இராவணன் தலையறுப்புண்டு மாண்டு போனான் என்பது பூர்வர்கள் திருவுள்ளம்.

*நிறம்கரியன் செய்ய நெடுமலராள் மார்வன்*
*அறம் பெரியன் ஆரதறிவார்? - மறம் புரிந்த*
*வாளரக்கன் போல்வானை வானவர்கோன் தானத்து*
*நீளிருக்கைக் குய்த்தான் நெறி.*

## திருமங்கை


பெரிய பிராட்டியோடு சேர்த்தியில் தம்முடைய திருமார்பில் மஹாலக்ஷ்மியினை தாங்கியவனே



## சாந்தி நிலையம்

**திருவேங்கடமுடையான் திருமலையில் ஆனந்த நிலையத்தில் நின்ற கோலத்தில் எழுந்தருளியுள்ளார். ஸ்வாமியின் பட்டத்து மஹாராணியான ஸ்ரீபத்மாவதி தாயார் திருச்சானூரில் சாந்தி நிலையத்தில் பத்மத்தில் (தாமரையில்) (பத்மாசனம்) அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார்.**

**உலக மக்கள் ஆனந்தத்திற்காக பெருமாளும், சாந்திக்காக தாயாரும் இடைவிடாமல் அலையென வரும் பக்தர்களின் குறைகளை தீர்க்கின்றார்கள். இந்த சாந்தி நிலையத்தில் விமான பத்மாவதி தாயார் நமக்கு தரிசனமளிக்கிறாள். கருவறையில் ஸ்ரீபத்மாவதி தாயாரை தரிசினம் செய்த பின்னர் ஆலயத்தை சுற்றும் பொழுது விமான பத்மாவதி தாயாரை தரிசிக்கலாம்.**



வேதங்களால் போற்றப்படும் தனித்துவமான பரம்பொருள் என்பது ஸ்ரீவைஷ்ணவத்தின் அடிப்படையான கோட்பாடு. அழகிய நீண்ட திருக்கைகளையுடைய அத்தகைய திருமாலின் திருக்கல்யாண குணங்களை நாவினால் போற்றி துதிக்கும் கைங்கர்யத்தினாலும், அவனுடைய திருவடிகளிலே இப்பிறவியில் சரணாகதி அனுஷ்டித்த காரணத்தினால் பெரும்பயனான பரமபத பாக்கியம் கிட்டிய பேரு உண்டானதை நான்கு திசைகளிலும் உள்ள அனைவரும் கேட்டு தெளிவு பெற்று ஸ்ரீவைஷ்ணவத்தினை கைகொள்ளுமாறு அழைக்கிறார் பூதத்தாழ்வார். பிராட்டியோடு சேர்ந்த திருமாலினை சரணாகதி செய்ய வேண்டும் என்ற புருஷகாரம் பூதத்தாழ்வாரால் அருளப்படுகிறது.

*திருமங்கை நின்றருளும் தெய்வம் நாவாழ்த்தும்*
*கருமம் கடைப்பிடிமின் கண்டீர் - உரிமையால்*
*ஏத்தினோம் பாதம் இருந்தடக்கை எந்தைபேர்*
*நாற்றிசையும் கேட்டீரே? நாம்*

### ஒரு வல்லித்தாமரையாள்

*வந்துதுதைத்த வெண்திரைகள் செம்பவளம் வெண்முத்தம்*
*அந்திவிளக்கும் அணிவிளக்காம் - எந்தை*
*ஒரு வல்லித்தாமரையாள் ஒன்றிய சீர்மார்வன்*
*திருவல்லிக்கேணி யான் சென்று*

திருவல்லிக்கேணி திவ்யதேசத்தின் சாயங்காலப் பொழுதில் அருகே உள்ள கடற்கரையில் ஒதுங்கிய சிவந்த பவளங்களும், வெண்மையான முத்துக்களும் ஒளிர ஆரம்பித்து திருக்கோயிலுக்கு அழகான சாயங்கால தீபங்கள் ஏற்றி வைத்த தோற்றத்தினை இயற்கையிலே தோற்றுவிக்கின்றது. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி எம்பெருமான் திருமார்பிலே அழகிய தாமரையில் வீற்றிருக்கும் பெரிய பிராட்டியார் அடியார்களுக்காகவே கணநேரமும் பிரியாது கருவறையில் ஒளிர்ந்து சேவை சாதிக்கிறாள். இயற்கையின் ஒளிவெள்ளத்தில் திருமாலின் திருமார்பில் பொலிவுடன் வீற்றிருக்கும் திருமகளை திருவல்லிக்கேணி சென்றவுடன் சேவித்து மகிழ்கிறார் பேயாழ்வார். கடற்கரையின் முத்துக்களும் பவளங்களும் சேர்ந்து கோயிலின் விளக்குகளாய் திகழ எம்பெருமான் கருவறையின் விளக்காய் பிராட்டி சுடர்விடுவதை பேயாழ்வார் அருளுகிறார்.

### பூமகள்

உப்புக்கரிக்கின்ற கருங்கடலிலே சேவை சாதிக்கும் எம்பெருமானின் திருமார்பிலே அழகிய சிவந்த அதரங்களையுடைய திருமகள் தாமரை மலரிலே வீற்றிருந்து

சேவை சாதிக்கிறாள். நவரத்தினங்களாலான பல வகையான ஆபரணங்களால் பெருமாளின் திருமார்பு பலவண்ண வர்ண ஜாலத்தால் ஜொலிக்கிறது. பரம பாகவதர்களான அடியார்கள் எம்பெருமானுக்கு அடிமை செய்தவர்களாய் அவனுக்கும் கைங்கர்யங் களையே வெளியுலகில் செய்து கொண்டு வாழ்ந் திருப்பர். பகவத் பாகவத கைங்கர்யங்களையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டு சரணாகதி தத்துவத்தினை உள்வாங்கி ஸ்ரீவைஷ்ணவத்துவம் மிளிர காலம் கழிப்பதை உணர்த்துகிறார் பேயாழ்வார். எம்பெருமானின் திருவாபரண ஜொலிப்பில் திருமகளும் சேர்ந்து ஜொலிப்பதை ஆழ்வார் அனுபவித்துப் பாசுரமிடுகிறார்.

*அவற்கடிமைப் பட்டேன் அகத்தான் புறத்தான்*
*உவர்க்கும் கருங்கடல் நீருள்ளான் - துவர்க்கும்*
*பவளவாய் பூமகளும் பன்மணிப்பூணாரம்*
*திகழும் திருமார்பன் தான்*

**பூமேல் திரு:**

எம்பெருமானின் மலையினையொத்த திருமார்பில் குளிர்ச்சியான திருத்துழாய் மாலை அலங்கரிக்கிறது. சுதர்சன சக்கரத்தினை தாங்கியுள்ள எம்பெருமான் ஒருவனே பிறவி நோய் தீர்க்க வல்லவன் என்று அத்யந்த சரணாகதி செய்தலே ஆத்மாவை உய்விக்கும். கருமேகங்கள் சூழ்ந்து மழை பெய்யும் தருவாயில் ஏற்படும் மின்னல் வானம் கண் திறந்து இமைத்து ஒளியினை வீசுவதுபோன்று தேன் நிறைந்த தாமரையில் அமர்ந்துள்ளவளான திருமகள் பாகவதோத்தமர்களுக்கு அந்தமில் பேரின்ப வாழ்வான பரமபதம் கிடைப்பதற்கு எம்பெருமானிடம் சிபாரிசு எனும் புருஷகாரம் செய்தருளுவதால் பெரிய பிராட்டியின் கருணையினை நோக்கி இருப்பதும் ஜீவாத்மாக்களின் பக்தி நெறி கடமையாகும் எனத் தலைக்கட்டுகிறார் பேயாழ்வார்.

*சார்வு நமக்கென்றும் சக்கரத்தான் தண்டுழாய்த்*
*தார்வாழ் வரைமார்பன் தான் முயங்கும் காரார்ந்த*
*வானமரு மின்னிமைக்கும் வண்டாமரை நெடுங்கண்*
*தேனமரும் பூமேல் திரு*

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.**



## ஸ்ரீசுந்தரராஜப் பெருமாள்

தாயார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள மற்றொரு சன்னதி ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி சன்னதி. ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி, ஸ்ரீமகா விஷ்ணுவின் ஓர் ஸ்வரூபம். தேவர்களுள் கோடி அழகுயுடைய சுந்தரனாய்த் திகழ்வதால், ஸ்வாமி இப்பெயரால் போற்றப்படுகிறார். கர்ப்பகிரகத்தில் ஸ்ரீதேவி, பூதேவி உடனுறை ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியை தரிசிக்கலாம்.

ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி மூர்த்தி, ஆனி மாதம் சதயம் நட்சத்திரம் கூடிய பௌர்ணமியன்று கண்டெடுக்கப்பட்டதால், 1906 ஆம் ஆண்டு ஹாதிராம்ஜி மடத்தின் மஹந்த் "அவதார உத்ஸவம்" துவங்கினார். 2006ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானம் "சுந்தரராஜ ஸ்வாமி அவதார உத்ஸவத்தின்" சதாப்தி (நூற்றாண்டு) திருவிழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது குறிப்பிடத்தக்கது. மூன்று நாட்கள் நடைபெறும் இந்த உற்சவம் சதய நட்சத்திரத்தன்று தொடங்கி, உத்திரட்டாதி நட்சத்திரத்தில் நிறைவடையும். புராணத்தின் படி உத்திரட்டாதி திருநட்சத்திரமே ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியின் ஜன்ம நட்சத்திரமாகும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார்

## கார்த்திகை பிரம்மோத்ஸவம்

### 2022 நவம்பர் 20ஆம்தேதி முதல் 28ஆம்தேதி வரை

**20-11-2022, ஞாயிறு**

பகல் : துவஜாரோஹணம்

இரவு : சிறிய சேஷ வாகனம்

**21-11-2022, திங்கள்**

பகல் : பெரிய சேஷ வாகனம்

இரவு : ஹம்ச வாகனம்

**22-11-2022, செவ்வாய்**

பகல் : முத்துப்பந்தல் வாகனம்

இரவு : சிம்ம வாகனம்

**23-11-2022, புதன்**

பகல் : கல்பவிருக்ஷ வாகனம்

இரவு : ஹனுமத்வாகனம்

**24-11-2022, வியாழன்**

பகல் : பல்லக்கு உற்சவம்

மாலை : வசந்தோத்ஸவம்

இரவு : யானை வாகனம்

**25-11-2022, வெள்ளி**

பகல் : சர்வபூபால வாகனம்

இரவு : கருட வாகனம்

**26-11-2022, சனி**

பகல் : சூரியப்பிரபை வாகனம்

இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**27-11-2022, ஞாயிறு**

பகல் : திருத்தேர்

இரவு : குதிரை வாகனம்



**28-11-2022, திங்கள்**

பகல் : சக்ரஸ்நானம்-பஞ்சமி தீர்த்தம்

இரவு : துவஜாவரோஹணம்

திருமலையில் 27-09-2022 முதல் 05-10-2022 வரை வைபவமாக நடைபெற்ற பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள். 01-10-2022 அன்று நடைபெற்ற கருட சேவை முன்னிட்டு ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து கொண்டுவரப்பட்ட கோதா மாலையை சுமந்து வரும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் ஸ்வாமிகள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர் மற்றும் உயர் அதிகாரிகள்












# ஆகாசராஜன் திருமகள் ஸ்ரீபத்மாவதியும் திருச்சானூர் ஸ்ரீமகள் ஸ்ரீபத்மாவதியும்

– திரு. ஜ. பாலசுப்ரமண்யம், திருப்பதி.

இப்பிரம்மாண்டத்தில் ஒப்பற்ற பரம்பொருளான ஏழுமலையானுக்கு இக்கலியுகத்தில் இரு தர்ம பத்னிகள் உள்ளனர். அவ்விருவரின் பெயர்களும் பத்மாவதியே! ஒருவர் மண்ணில் தாமரை மீது சிறு குழந்தையாய் கண்டெடுக்கப்பட்டாள். மற்றொருவர் தண்ணீரில் தாமரை மீது பதினாறு வயது குமரியாய் அவதரித்தாள். இவ்வாறு இவர்களிருவருக்கும் பல வித்தியாசங்கள் இருந்தாலும், இறுதியாக இருவரும் ஒரே வடிவில் "வியூக லக்ஷ்மி" எனும் பெயரில் திருவேங்கடமுடையானின் இதயப் பீடத்தை அலங்கரிக்கின்றனர். ஆதலால்தான் தம் பிரபுவிற்கு ஸ்ரீநிவாசன் எனும் பெயரையும் வைத்தனர்.

விசித்திரமாகவும், ஆச்சரியமாகவும் உள்ள இந்த பத்மாவதிகள் இருவரின் வரலாற்றினை சிறிது விரிவாக ஆலசி ஆனந்திப்போம்.

## ஆகாசராஜன் மகள் பத்மாவதி

திருப்பதியிலிருந்து சுமார் 40 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள நாராயணவனத்திற்கு அரசன் ஆகாசராஜன். இவன் பிள்ளை பேற்றிற்காக புத்ர காமேஷ்டி யாகம் புரிய நிலத்தை உழுதான். அப்பொழுது தங்கத்தாமரையில் ஒரு பெண் குழந்தை கிடைத்தது. தாமரையில் இருந்த அக்குழந்தைக்கு பத்மாவதி எனப் பெயர் சூட்டி வளர்த்து வந்தான். இதே நேரத்தில்...

வைகுண்டத்திலிருந்து பூலோகத்திற்கு வந்த மஹாலக்ஷ்மியைத் தேடிக் கொண்டு மஹா விஷ்ணு ஆதிவராஹத் தலத்தை அடைந்தார். தாய் வகுளமாதா ஆசிரமத்தில் இருந்து கொண்டு, ஒரு நாள் வேட்டைக்குச் சென்ற வேங்கடவன் ஆகாச ராஜனின் மகளான பத்மாவதியைக் கண்டு மோகமுற்றார். அப்பெண்ணை தனக்கு திருமணம் செய்விக்கும்படி வகுளமாதாவிடம் கேட்டார். அவள் சக்ரவர்த்தியின் மகளல்லவா என வகுளமாதா கூற, இராமாயணக் காலத்தின் போது வேதவதி அவள். சீதைக்காக இலங்கையில் இன்னல்கள் கண்ட அவளை திருமணம் செய்து கொள்ளும்படி கூறிய சீதையின் கோரிக்கைக்காக கலியுகத்தில் வேங்கடவனாக வந்து மணம் புரிவேன் என்று வாக்களித்தேன். அந்த வேதவதியே தற்பொழுது பத்மாவதியாக அவதரித்தாள் எனக் கூற, வகுள மாதாவும் ஆகாச ராஜனிடம் சென்று இவ்வரலாற்றையும் கூற, சிறப்பாக திருவேங்கடமுடையானுக்கும் பத்மாவதிக்கும் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

சிறிது காலத்திற்குப் பின்னர் பத்மாவதியை வகுளமாதாவிடம் ஒப்படைத்து அன்னையே! உலக நன்மைக்காக வந்த மஹாலக்ஷ்மி என்னிடம் வருதல் வேண்டும். அவள் கொல்ஹாபூரில் உள்ளாள். நான் அழைத்துக் கொண்டு வருகிறேன் என்று கூறி புறப்பட்டார். ஆனால் அங்கு லக்ஷ்மி காண வில்லை. அப்பொழுது "வேங்கடேசா! உனக்கு மஹாலக்ஷ்மி தரிசனம் இங்கு கிடைக்காது. சுவர்ணமுகி நதிக்கரையில் பத்மசரோவரம் எனும் திருக்குளத்தை அமைத்து தவம் புரி. அங்கு லக்ஷ்மி தேவி உனக்கு காட்சியளிப்பார்" என்றது அசரீரி.

## திருச்சானூர் பத்மாவதி

உடனே வேங்கடவன் சுவர்ணமுகி நதிக்கரைக்கு வந்து பத்மசரோவரத்தை அமைத்து 12 வருடங்கள் லக்ஷ்மி தேவிக்காக தவம் புரிந்தார். கார்த்திகை சுத்த பஞ்சமி வெள்ளிக்கிழமை உத்திராடம் நட்சத்திரம் அபிஜித் லக்னத்தில் (நண்பகல் 12 மணிக்கு) பத்மசரோவரத்தில் ஆயிரம் இதழ்கள் கொண்ட தங்கத்தாமரையில் பதினாறு வயது குமரியாய் திவ்ய ஒளியுடன் ஸ்ரீமஹாலக்ஷ்மி காட்சியளித்தாள். தண்ணீரில் பத்மத்தில் தோன்றியதால் "பத்மாவதி" என தேவதைகள் அனைவரும் போற்றினர். அலர்மேல் மங்கை என்றனர் ஆழ்வார்களும்.

தேவதைகள், ரிஷிகள், யக்ஷ கின்னரர்கள், கந்தர்வர்கள் என அனைவரும் பலவிதமாக பத்மாவதி தாயாரை துதித்தனர்.

*ஓம் நமஸ்ஸ்ரியை லோகதாத்ர்யை பிரஹ்மமாத்ரே நமோ நம:*
*நமஸ்தே பத்மநேத்ராயை பத்மமுக்யை நமோ நம:*
*பிரசன்ன முக பத்மாயை பத்மகாந்த்யை நமோ நம:*
*நமோ பில்வவனஸ்தாயை விஷ்ணுபத்ன்யை நமோ நம:*
*விசித்ர க்ஷௌமதாரிண்யை ப்ருதுச்ரோண்யை நமோ நம:*
*பக்வ பில்வ பலாபீன துங்கஸ்தன்யை நமோ நம:*
*சுரக்த பத்ம பத்ராப கரபாததலே சுபௌ சுரத்னாங்கத கேயூர காஞ்சீநூபுர சோபிதே*
*யக்ஷ கர்தம ஸம்லிப்த ஸர்வாங்கே கடகோஜ்ஜ்வலே*
*மாங்கல்யாபரணை ச்சித்ரை: முக்தா ஹாரை ர்விபூஷிதே*
*தாடங்கை ரவதம் ஸைச்ச சோபமான முகாம்புஜே*
*பத்மஹஸ்தே நமஸ்துப்யம் ப்ரஸீத ஹரிவல்லபே*
*ருக்யஜுஸ்ஸாமரூபாயை வித்யாயை தே நமோ நம:*
*ப்ரஸீதாஸ்மான் க்ருபாத்ருஷ்டிபாதை ராலோகயாப்திஜே*
*யே த்ருஷ்டா ஸ்தே த்வயா ப்ரஹ்ம ருத்ரேந்த்ரத்வம் ஸமாப்னுயு:*

பிரம்மாதி தேவதைகளின் வேண்டுதலின்படி அலர்மேல் மங்கை, பத்மாவதியாக அர்ச்சை வடிவில் பூஜைகளை ஏற்றுக் கொள்கிறாள். அன்று முதல் தாயார் அவதரித்த கார்த்திகை மாதம் சுத்த பஞ்சமி அன்று நிறைவடையும்படி பத்து நாட்கள் பிரம்மாதி தேவதைகளால் திருச்சானூர் பத்மாவதி தாயாருக்கு பிரம்மோத்ஸவம் நடைபெற்று வருகின்றது. அன்று முதல் திருவேங்கடமுடையானிடமிருந்து பஞ்சமி நாளில் மங்களப்பொருட்கள் அனுப்பப்படுகின்றன.

உடனே திருவேங்கடமுடையான் பத்மாவதியை தன் இதயத்தில் வியூக லக்ஷ்மியாக ஏற்று வேங்கடாசலத்திற்குச் சென்றார். அங்கிருந்த ஆகாச ராஜனின் மகளான பத்மாவதியும் வியூக லக்ஷ்மியாக ஐக்யமானாள். அன்று முதல் திருவேங்கடமுடையானும் ஸ்ரீநிவாசனாக சாலக்கிராம சிலை வடிவில் எழுந்தருளி பக்தர்களால் துதிக்கப்பட்டு, வேண்டும் வரங்களை அளித்து வருகின்றார்.

*வக்த்ராப்ஜே பாக்யலக்ஷ்மீ: கரதலகமலே*
*ஸர்வதா தானலக்ஷ்மீ:*
*தோர்தண்டே வீரலக்ஷ்மீ:*
*ஹ்ருதயஸரஸிஜே பூதகாருண்ய லக்ஷ்மீ:*
*கட்காக்ரே சௌர்யலக்ஷ்மீ:*
*நிகிலகுணகணாடம்பரே கீர்த்திலக்ஷ்மீ:*
*ஸர்வாங்கே ஸௌம்யலக்ஷ்மீ:*
*மயிதுவிஜயதாம் ஸர்வஸாம்ராஜ்ய லக்ஷ்மீ:*
*ஓம் ச்ரியை நம:*



## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருமலையில் 27-09-2022 முதல் 05-10-2022 வரை வைபவமாக நடைபெற்ற பிரம்மோத்ஸவத்திருக்காட்சிகள். கஜ வாகன சேவையில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள், தி.தி.தே. திருப்பதி இணைச்செயலாட்சித் தலைவர் திரு.வி.வீரப்ரம்ஹம், ஐ.ஏ.எஸ். அவர்கள், இணைச்செயலாட்சித்தலைவர் (H&E) திருமதி எஸ்.பார்கவி ஐ.ஏ.எஸ்.அவர்கள்













### கார்த்திகை பிரம்மோத்ஸவம்

கார்த்திகை மாதம் வளர்பிறை பஞ்சமி திதியன்று வெள்ளிக்கிழமை திருச்சானூரில் "பத்மசரோவரம்" என்ற திருக்குளத்தில் தாமரை மலர்களுக்கிடையில் ஸ்ரீமஹாலக்ஷ்மி அவதரித்தாள். அதனைக் கொண்டாடும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் திருமலை பிரம்மோத்ஸவத்திற்கு ஈடாக திருச்சானூரில் கார்த்திகை பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. ஒன்பது நாள் நடைபெறும் இவ்விழாவின் கடைசி தினமான "பஞ்சமி தீர்த்தம்" என்கிற சக்ர ஸ்நானத்துடன் இவ்விழா முடிவடைகிறது. இந்த பிரம்மோத்ஸவத்தில் பஞ்சமியன்றே பத்மங்களுக்கு மத்தியில் பத்மாவதி அவதரித்ததால் "பஞ்சமி தீர்த்த விழா" மிகவும் சிறப்பு வாய்ந்தது. லட்சக் கணக்கான மக்கள் கூடி சுதர்சன சக்கரத்துடன் அந்த குளத்தில் மூழ்கி எழுவர்.

"பஞ்சமி தீர்த்த" நாளன்று திருமலை வேங்கடவனிடமிருந்து மஹாலட்சுமியான பத்மாவதி தாயாருக்கு பட்டுப்புடவை, நகைகள், மஞ்சள், குங்குமம், பட்சணங்கள் இவற்றை அந்தணர்கள் கூடைகளில் சுமந்து திருமலையினின்று நடந்து வருவர். அதிகாலை 3.30 மணியிலிருந்து 4.00 மணிக்குள் வேங்கடவன் உத்தரவு கிடைத்தபின் அவர்கள் திருமலைக் கோயிலினின்று கிளம்பி அவர்கள் நடந்து வரும் வேகம் பிரமிப்பாக இருக்கும். மலையடிவாரத்தில் அவர்களை வரவேற்க யானைகள் மேளதாளங்கள் காத்திருக்கும். பின்னர் அவர்கள் கபில தீர்த்தம் வழியாக திருப்பதி வீதிகளில் நடந்து கோவிந்த ராஜா ஸ்வாமி கோயிலில் சுமைகளை இறக்கி வைத்து சற்று சிரம பரிகாரம் செய்து கொண்டு மறுபடியும் திருச்சானூருக்கு நடந்தே மேள தாளத்துடன் வருவர். புடவை, மஞ்சள், குங்குமம், நகை, இவை யாவும் யானை மேல் எடுத்து வரப்படும். வழியில் தரிசிக்க வரும் பக்தர்களுக்கெல்லாம் குங்குமம் அளிக்கப் படும். "சாரே" என்றழைக்கப்படும் இந்நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் எஸ்.வி.பி.சி. சேனலில் கண்டு மகிழுங்கள்.

### அன்னை மகாலட்சுமியின் அழகு

அன்னமய்யா கீர்த்தனைகளிலிருந்து, தொகுத்து அவர் அன்னையின் அழகை எவ்வாறு ஆராதித்துள்ளார் என்பதைக் காண்போம்.

முழு நிலவைப் போன்ற முகம்! மின்னலைப் போன்று ஒளிரும் புன்னகை, பட்டமரத்தையும் துளிர்க்க வைக்கும் இனிய குரல். அழகிய உடல் வாகுடனும், அடர்ந்த கூந்தலுடனும் தெய்வீக

# அன்னமய்யா போற்றும் பத்மாவதி தாயார்



- திருமதி ராதா ராமநாதன், திருப்பதி.








அழகுடன் அவள் அமர்ந்திருக்கிறாள். மன்மதனையே ஈன்றெடுத்தத் தாயான அவளிடம் அழகுக்கு என்ன குறை? செல்வத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கும் அவளுக்கு ஆபரணங்களுக்கா குறை? பாற்கடலில் பிறந்த அவள் கடல் போன்று கம்பீரத்துடன் அமர்ந்திருக்கிறாள் பாருங்கள். தேவர்களின் வணக்கத்துக்கு உரியவளான அவளது பெருமையைக் கேட்கவா வேண்டும்? குளிர்ந்த தாமரைக் குளத்தில் பிறந்த அவளிடம் குளிர்ச்சிக்கு என்ன குறை? இவ்வுலகையே ஈன்றெடுத்த அவளின் கருணைக்கு அளவுண்டா? வேதத்தின் வித்தாகவும், அதன் பொருளாகவும் காலம் கடந்து நிற்பவளே! கல்பவல்லீ! கோவிந்தனின் மார்பிலேயே உறைந்து அவனை எப்போதும் ஆனந்தத்தில் ஆழ்த்துபவளே! எங்கள் இல்லங்களிலும் உறைவாய் அம்மா!


அன்னமய்யாவின் மென்மையுணர்வுக்கு ஒரு உதாரணமான பாடல். *(குறுக்க நடவரோ கொம்ம லாலா!)* அழகிய மகளிர் அலர்மேல் மங்கையின் பல்லக்கைத் தூக்கி சுமந்து வருகின்றனர். இதைக் காணும் அன்னமய்யாவிற்கு ஒரு தாயின் உணர்வோடு மனம் பதைக்கின்றது.

“கொம்மலாலா! ஜாக்கிரதை! ஜாக்கிரதை! மெதுவாக மெதுவாக நடந்து வாருங்கள். அலர்மேல் மங்கை அணிந்துள்ள மல்லிகை மலர்கள் உதிர்கின்றன. அவளது உடல் வருந்தாமல், அவ ளது

## கஜ வாகனம்

## கருட வாகனம்

**திருமலை வேங்கடவனுக்கு கருட வாகனம் சிறப்புடையது. திருச்சானூர் தாயாருக்கு கஜ வாகனம் சிறப்புடையது. திருமலை நாதனின் பட்டத்து ராணியான அவள் கஜ வாகனத்தில் கம்பீரமாக உலா வருவதை கண்டு ரசிக்க வேண்டும். அவளது கஜ வாகன உலாவைக் கண்டு அன்னமய்யா என்ன வேண்டுகிறார் பாருங்கள். வீரத்தையும் வெற்றியையும் தனங்களையும் அள்ளி அள்ளித் தரும் தாயே! ஏழு உலகத்தையும் ஆண்டருளும் தாயே! எங்களையும் ஆண்டருள்வாய் என்கிறார். திருச்சானூர் பிரம்மோத்ஸவத்தில் கருட வாகனத்தின் போது தாயாரின் கால்கள் நேரிடையாக கருடனின் கைகள் மீது படக்கூடாது என்பதற்காக, திருமலையில் இருந்து வேங்கடவனின் பாதங்கள் கொண்டு வரப்பட்டு தாயாரின் பாதங்களை அதற்குள் வைத்தே அலங்கரிப்பர்.**

மார்புச் சீலை விலகாமல் நடந்து வாருங்கள். அவள் இப்போதே ஓய்ந்து வியர்த்து காணப்படுகிறாள். அவள் மீது குளிர்ந்த சந்தனத்தை தெளியுங்கள். அவளது புடவை தலைப்பில் பதித்துள்ள முத்துக்களும், பொன்னும் மின்னுகின்றன. பச்சை மரகதம் பதித்த கால்கொலுசுகள் கிண்கிணிக்கின்றன. வேங்கடவனின் அணைப்பில் இணைந்திருக்கும் அலர்மேல் மங்கைக்கு பல்லக்கு தூக்கி வரும் மங்கையரே! ஆரத்தி எடுங்கள். திருஷ்டிபட்டு விடப் போகிறது.

மெல்லிய திரை மறைவில் ஹரி பார்த்து மகிழ அலர்மேல் மங்கை நடனமாடிக் கொண்டிருக்கிறாள். அந்தக் காட்சி அன்னமய்யாவின் மனத் திரையில் ஓடுகிறது. அந்தக் காட்சியை நாமும் பார்ப்போம். வாருங்கள்!



## ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி

**திருச்சானூரில் ருக்மிணி சத்யபாமா சமேத ஸ்ரீகிருஷ்ணர் கொலுவீற்றிருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணர் உபய நாச்சிமார்களுடன் தெப்போத்ஸவத்தில் எழுந்தருளி அனைவருக்கும் திருக்காட்சி அளிப்பார்.**

அலர்மேல் மங்கை நளினமாக ஆடிக் கொண்டிருக்கிறாள். தாளத்திற்கேற்றவாறு, பாடிக் கொண்டும் சுற்றி சுற்றி ஆடுகிறாள். அவளது திறமையைக் கண்டு ஹரி கைத்தட்டி ஆரவரிக்கிறார். அவளது ஒய்யாரமான அசைவுகளை வேங்கடபதி ரசித்துக் கொண்டிருக்கிறார். அழகிய மங்கையர் அலர்மேல் மங்கையின் நடனத்தையும் அழகையும் வியந்து பாராட்டி அவள் மேல் மலர்களைச் சொரிகின்றனர். (அலருலு குரியாக ஆடனெதே) அவளது கால் மெட்டி வளையல்கள் ஒலிக்க, நவரத்தினங்கள் பதித்த கால் கொலுசு மின்ன சிந்து பாடல்கள் பாடி சிரிபொல ஆடல் வேங்கடபதி மெச்ச ஆடிக் கொண்டிருக்கிறாள்.

அன்னையே உன் அழகை எப்படிப் புகழ்வது? உன் அழகு வசந்த கால மலர்கள் போன்று பல வண்ணங்களில் ஒளிர்கிறது. நீ புன்னகைக்கும் போது உன் கன்னங்கள் அழகாகச் சிவக்கின்றன. அப்போது அவை மலர்ப் படுகை போல் இருக்கின்றது. உனது புன்னகை சில சமயம் மறைந்தும் சில சமயம் வெளிப்படையாகவும் காணக்கிடைக்கிறது. கற்பூர தாம்பூலம் அணிந்த உன் உதடுகள் உன் மணாளனைக் கவர்ந்து கட்டியணைக்க வைக்கிறது. நீ

## திருத்தேரில் ஸ்ரீபத்மாவதி தாயார்

**திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவத்தில் எட்டாம் நாள் காலையில் ஸ்ரீபத்மாவதி தாயார் திருத்தேரில் பவனி வந்து பக்தர்களுக்கு காட்சியளிப்பாள். திருத்தேர் பூக்களால் அலங்கரிங்கப்பட்டு, தங்கக்குடையை திருத்தேர் உச்சியில் கட்டி கலகலவென ஓசையுடன் உலாவரும். இந்த திருவீதி உலாவில் வேத பண்டிதர்கள், மங்கள வாத்தியங்களுடன் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளுடன், மக்கள் கூட்டம், யானைகள், குதிரைகள் உலா வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.**



உன் மணாளனோடு கூடி மகிழும் விளையாட்டு எங்களுக்கு விழாவாகிறது என்கிறார். *"ஏமனி பொக டதுமே இக நின்னு ஆமனி சொபகுல அலமேல்மங்க"* என்ற பாடலில்,

பஞ்சமி தீர்த்தத்தின்போது தாயார் மஹா லக்ஷ்மியும் சுதர்சன சக்கரமும் ஒருங்கே பத்ம சரோவரக் குளக்கரையில் வைக்கப்பட்டு அபிஷேகங்கள் நடந்தபின் குளத்தில் இருவர் இருபுறமும் பிடிக்க பக்கத்திலேயே இருவர் அணைப்புடன் நடந்து குளத்தில் வேதங்கள் முழங்க சக்கர ஸ்நானம் நடைபெறுகிறது. சக்கரத்தைப் புகழ்ந்து பாடி குளத் தில் மானசீகமாக மூழ்கி எழுந்து நம் பாவங்களைப் போக்கிக் கொள்வோம்.

"ஹரியின் கரத்தில் அழகாக ஒளி வீசும் சக்கரமே! அசுரர்களை அழித்து நல்லோரைக் காப்பாற்ற எப்போதும் தயாராய் இருக்கும் சக்கரமே! பாதாளம் வரை இரண்யாக்ஷகனை துரத்தி துரத்திச் சென்று அவனது தலையை அறுத்து எரிந்தவனே! அரக்க அரசர்களின் கிரீடத்தில் உள்ள வைரங்களை அறுத்து அறுத்து உன் முனைகள் கூர்மை படுத்தப் பட்டுள்ளது. ஒளியுடன் சுழலும் சக்கரமே பிரம்மா உன்னை வேதமந்திரங்களால் வழிபடுகிறார். வேங்கடவன் திருவீதி உலா வரும் போது உற்சவங் களில் முன்னின்று நடத்தித் தருபவனே! எங்களைக் காத்தருள்வாய்!

கார்த்திகை பிரம்மோத்ஸவம் பஞ்சமி தீர்த்த ஸ்நானத்துடன் முடிவடைந்தபின் மறுநாள் மனித முயற்சியில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அவற்றை மன்னித்து ஏற்றருள வேண்டும் என்ற பிரார்த்தனை யுடன் புஷ்பயாகம் நடத்தப்பெறுகிறது. நாமும் நம் இல்லங்களில் மஹாலக்ஷ்மி தாயாரையும் திருவேங்கடவனையும் புஷ்பங்களால் வழிபடு வோம்.

## சூரிய நாராயணர் ஆலயம்...



**ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தின் வடக்கு பகுதியில் பத்மசரோவர புஷ் கரணிக் கரையில் அமைந்துள்ள சூரிய நாராயணர் ஆலயத்தை பற்றி ஸ்ரீவேங் கடாசல மஹாத்மியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.**

**திருவேங்கடமுடையான் ஆயிரம் தாமரை மலர்களை பத்மசரோவரம் என்ற இந்த புஷ்கரணி யில் நட்டு தவமியற்றிய போது சூரிய நாராயணர் பங்கு இன்றியமையாத ஒன்றாக இருந்தது.**

**ஸ்ரீபத்மாவதி தாயார் பத்மசரோவரத்தில் ஆவிர்பவித்தபோதும் சூரிய நாராயணர் பங்கு மிகுத்தானது. இந்த ஆலயத்தில் சூரிய நாராயணர் 20 அடி உயரத்தில் கருமையான கல்லினால் வடிக்கப் பட்டுள்ளதை தரிசிக்கலாம்.**

**பெருமை மிக்க இத்திருச்சுகனூரில் எழுந்தருளியிருக்கும் இந்த சூரியநாராயண ஸ்வாமிக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது. இக்கோயிலில் அனைத்து சேவைகளும், பூஜைகளும் வைகானச ஆகம முறைப்படி நடைபெறுகிறது.**

**இரதஸப்தமி நாளன்று இந்த ஆலயத்தை அழகு மிக்க மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் பல நிகழ்ச்சிகளும் நடைபெறும்.**





# ஸ்ரீபிள்ளை லோகாச்சார்யார் போற்றும் பெரிய பிராட்டியார் வைபவம்

- டாக்டர் ஏ.வி. ரங்காசாரி,
கடலூர், 04144 220425

மஹாலக்ஷ்மியான பெரிய பிராட்டியாருக்கு லக்ஷ்மி, பத்மாலயா, பத்மா, கமலா, ஸ்ரீ, ஹரிப்பிரியா, இந்திரா, லோகமாதா, மங்கள தேவதா, பார்கவி, லோக ஜனனி என்ற பெயர்கள் உண்டு. அவற்றில் ஓர் எழுத்துப் பெயரான ஸ்ரீ என்பது சிறப்பானது. துவய மந்திரத்தின் முதல் எழுத்தே பிராட்டியைக் குறிக்கும் ஸ்ரீ என்பதே. இதன் பொருள் எல்லோருக்கும் இவளைப்பற்றி ஸ்வரூப இலாபமாய் அவளுக்கும் எம்பெருமானைப் பற்றி ஸ்வரூப இலாபமாக இருக்கும் என்பதே. இதனால் பிராட்டியை நாம் பற்றும்போது இவள் எம்பெருமானிடம் நம்மைப் பரிந்துரைக்க முடிகிறது.

எனவே நீரிலே நெருப்புக்கிளருமா போலே எம்பெருமானுடைய குளிர்ந்த உள்ளத்திலே நாம் செய்யும் பகவத் பாகவத அபராதங்களாலே சீற்றம் பிறந்தால், நம்மைப் பொறுத்து அருளுவது பிராட்டிக்காகவே. இதற்கு காரணம் இவள் தாயாய் அடியவர்கள் படும் துன்பத்தைப் பொறுக்கமாட்டாமலும், எம்பெருமானுக்கு இனியவளாகவும் இருக்கையாலே நமக்கு எம்பெருமானிடம் கண்ணழிவற்ற பரிந்துரைப்பவளாக இருக்கிறாள்.

அதனால் எம்பெருமானுடைய சுதந்திரத்தன்மையும், பக்தர்களுடைய அபராதங்களையும் கண்டு அகலமாட்டாள். பக்தனும் இவை இரண்டையும் நினைத்து அஞ்சவேண்டிய தில்லை. இதனால் பற்றுவதற்கு விருப்பமே வேண்டுவது. காலம் பார்க்க வேண்டியதில்லை என்பது தெளிவு.

இதற்கு உதாரணம் சீதா பிராட்டியிடம் கொடிய அபசா ரத்தைச் செய்த காகாசுரன் இராமனுடைய அம்பு அவனைத் துரத்த, உலகெங்கும் சுற்றி அனைவராலும் கைவிடப்பட்டு இராமபிரானையே சரண் அடைந்தது. அப்போது சீதா பிராட்டி உடன் இருந்ததால் காகம் தலை தப்பியது. அதே சீதாபிராட்டியை இராவணன் ராமபிரானிடமிருந்து பிரித்ததால் இராவணன் முடியவும் இலங்கை அழியவும் ஆயிற்று. இதனால் பிராட்டியைப் பற்றுவதற்கு விருப்பமே போதும், காலம் பார்க்க வேண்டாம் என்பது தெளிவாகிறது.

பிராட்டி இவ்வாறு உதவுவதற்குக் காரணம் தன்னை பற்றும் அடியவர்களிடம் உள்ள கருணையும் எம்பெருமானிடம் தான் அத்யந்த தொண்டனாக இருப்பதும், எம்பெருமான் சொல்வ தையே தானும் செய்யுமவளாக இருப்பதும் ஆகும்.



# பத்மசரோவர புஷ்கரணி

**ஸ்ரீபத்மாவதி தாயாருக்காக ஸ்ரீஸ்ரீநிவாசர் வைகுண்டத்தை விடுத்து பூவுலகிற்கு வந்து சுவர்ணமுகி நதி தீரத்தில் ஓர் புஷ்கரணி அமைத்து அதில் ஆயிரம் தாமரை மலர்களை வளர்த்து தவமியற்றினார். அப்பேற்பட்ட புனிதமான புஷ்கரணியில் தாயார் கார்த்திகை மாதம், பஞ்சமி திதியில் அவதரித்தார். இந்த புஷ்கரணியை பத்மசரோவரம் என்று அழைப்பர். இந்த புஷ்கரணியில் காலணிகளை அணிந்து செல்லக் கூடாது. புஷ்கரணியில் நீராடும் பக்தர்கள் சோப்பு, ஷாம்பு பயன்படுத்துதல் கூடாது. புஷ்கரணியில் நீச்சல் அடித்தல் கூடாது. புஷ்கரணியில் ஆடைகளை துவைத்தல் கூடாது. விலை உயர்ந்த பொருட்கள், ஆபரணங்களை ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டு புஷ்கரணியில் நீராடுங்கள்.**

அதனாலேயே எம்பெருமானை நம்மாழ்வார் திருவாய் மொழியில் "மலர்மகள் விரும்பும் அரும் பெறலடிகள்" "திருமகளார் தனிக்கேள்வன்", "திருவின் மணாளன்", "பூமகளார் தனிக்கேள்வன்", "மலராள் மணவாளன்" என்றும் கொண்டாடுகிறார். இப்படி இருப்பதால் தன்னைப் பற்றுபவர்களிடம் நல்ல இன்மையையே அடிப்படையாகக் கொண்டு அவர்களிடம் பரிவு காட்டுதல் ஆகும்.

இதனால் பிராட்டி அகில உலகத்தாய் என்ற பந்தத்தாலே அடியார்கள் குற்றம் பாராமல் எல்லோரும் பற்றும்படியாயிருக்கும் இருப்பும் பெருமாளுடைய பத்தினியாகிற உறவு முறையாலே அடியார்கள் அனைவரும் எம்பெருமானாலே காக்கப்படுவதையும் சொல்லுகிறது.

இப்படி அடியவருக்கு பெருமாளிடமும் பிராட்டியிடமும் இயல்பான பந்தம் உண்டாயிருக்கும் போது ஏன் பிராட்டி பெருமானிடம் பரிந்துரை செய்ய வேண்டும்? பிராட்டி தாயான நிலையிலே குழந்தைகளின் தவறுகளையும் குணமாகக் கொண்டு அருள் புரியும் தன்மையாலும், எம்பெருமான் கடினமான உள்ளத்தை உடையவன் என்பதால் கொடிய தீவினைகளைச் செய்யும் மாந்தரையும் கருணை உள்ளங் கொண்டு பெருமானிடம் பரிந்துரை செய்ய வேண்டியுள்ளது.

இதற்கு உதாரணம் பிறருக்கு துன்பத்தைச் செய்வதையே பணியாகக் கொண்ட ராவணனுடைய இயல்பை பாராது நீ இராமனோடு நண்பனாக ஆகிவிடு என்று ஹிதத்தைச் சொல்லிய சீதை தன்னைத் துன்புறுத்திய அரக்கர்களிடம் "என்னிடம் பயம் வேண்டாம்" நான் உங்களுக்கு பாதுகாப்பாக இருப்பேன் என்றாள். இராவணனை இராமபிரான் அழித்த செய்தியை ஆஞ்சநேயர் சீதா பிராட்டியிடம் தெரிவித்து, தங்களைப் பத்து மாதம் துன்புறுத்திய அரக்கியர்களைத் தான் அழிக்க விரும்புவதாகத் தெரிவிக்க, அப்போது ஆஞ்சநேயரோடு மன்றாடி அரக்கியர்களைக் காப்பாற்றியபடியாலும், பிராட்டி உள்ளத்தினால் கருணை கொண்டவள் என்பது புலனாகின்றது.

பிராட்டிக்கு "ஸ்ரீ" என்கிற திருநாமத்தால் இவள் எம்பெருமானைப் பற்றி நிற்கிறாள் என்றும், தன்னைப் பற்றும் மக்களின் செயல்பாடுகள் இவளுடைய அருள் நோக்கையே கொண்டு இருக்கும் என்பதும்




# வெள்ளித் தோட்டம்

**திருமகளின் திவ்ய சரித்திரமும், திகட்டாத வழிபாட்டு முறைகளும், பல ஆயிரம் ஆண்டுகளாக பல்வேறு மக்களால், பலவித கோணங்களில், உருப்பெற்று, செழித்து, சிறப்பாக அளப்பரியதோர் ஆன்மீகச் சுவையுடன் அனுபவிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் சில புராணங்களின் வலுவான ஆதாரத்தினை கொண்டது. சில பரம்பரையான சம்பிரதாயமாக வலுவான நம்பிக்கை என்ற நிலைப்பாட்டினைக் கொண்டது. வெள்ளிக்கிழமை மகாலக்ஷ்மிக்கு உகந்த நாளாக வழிபாட்டில் இடம் பெறுகிறது. ஸ்ரீபத்மாவதி தாயார் சன்னதியில் வெள்ளிக்கிழமை அன்று மூலவருக்கு அபிஷேகமும், மாலை நேரத்தில் உற்சவமூர்த்திக்கு அபிஷேகம் இந்த வெள்ளித்தோட்டத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும். பால், தயிர், தேன், பஞ்சாமிருதம், சந்தனம் போன்ற பொருட்களாலும், பலவிதமான நறுமணப் பொருட்களாலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். இந்த வெள்ளிக்கிழமை நடைபெறும் அபிஷேக ஆராதனையால் இந்த தோட்டத்திற்கு வெள்ளித்தோட்டம் என்ற பெயரும் ஏற்பட்டது.**

அறியத்தக்கது. மேலும், இவ்வுலக வாழ்க்கையில் நற்செயல் ஏதும் செய்ய முடியவில்லையே அபரா தங்களையே செய்து வருகிறோமே இதற்கு இறைவன் தண்டிப்பாரே என்று தங்களுடைய குற்றம் செய்த நிலையையும் இறைவனுடைய தனித் தன்மையும் உணர்ந்த மக்கள், இப்படி இருக்கிற எங்களை இறைவன் திருவடிகளிலே சேர்க்க வேண்டும் என்று வேண்டினால் அதற்கு இறங்கி செவி சாய்த்துக் கேட்டு, எம்பெருமான் செவிப்படுத்திச் சேர்ப்பவள் என்பதையும் ஸ்ரீ என்கிற பெயர் தெரிவிக்கிறது என்றும் சொல்லுவார்கள்.

இதற்குக் காரணம் எம்பெருமானிடத்தில் பிராட்டிக்கு இயல்பாகவுள்ள அன்பே ஆகும். இதனை ஆழ்வார்கள் *''பித்தர் பனி மலர் மேல் பாவைக்கு''* என்றும் *''மலராள் தனத்துள்ளான்''* என்றும் *''மாமலர் மங்கை மணநோக்கமுண்டான்''* என்றும் *''அல்லி மலர் மகள் போக மயக்குகளாக் கியும் நிற்குமம்மான்''* என்றும் சொல்லுகையாலே தன் இனிமையாலே எம்பெருமான் நெஞ்சைத்துவக்கிக் கொண்டன்றோ இருப்பது. எம்பெருமான் தன் அன்பு நிலையின் எல்லை காணிலும் பிராட்டியின் அன்பு நிலை எல்லை காண முடியாது.

இப்படிப் பிராட்டியின் அன்பு நிலை ஏற்றமாக இருப்பது தான் இதற்கு காரணம். முருக்கம் பூவிற்கும் செங்கழுநீர் பூவிற்கும் சிறந்த வாசனையாலே செங்கழுநீர் பூவிற்கு பெருவிலை கிடைக்கும் மேன்மையா போலே, இதனால் பிராட்டிக்குப் பெருமாளைக் காட்டிலும் ஏற்றம் ஏன் என்றால் பற்

றும் போது உறவு இருவர்க்கும் ஒத்திருந்து பிராட்டி மக்களின் குற்றங்களை பொறுப்பித்து அவன் திருவடிகளிலே சேர்ப்பிக்கும் ஏற்றம் சொல்லுகிறது.

மேலும், பிராட்டி எம்பெருமானை விட்டு *"இறையும் அகலகில்லேன்"* என்றும், நொடியும் விட்டு பிரியாதவள் என்றும் சொல்லுகிறபடியே ஒரு காலும் பிரியாதிருப்பவள் எனப்படுகிறது. இதனால் பெருமாளிடம் பரிந்துரைக்கும் பிராட்டி எம்பெருமானை விட்டுப் பிரியாமல் இருப்பதாலே அடியார்கள் எம்பெருமானைப் பற்றுவதற்கு காலம் பார்க்க வேண்டாம் என்கிறது.

எம்பெருமானுடைய சுதந்திர தன்மையும் தங்களுடைய மக்கள் தன்மையையும் நினைத்து கைவாங்க வேண்டியதில்லை. அதனாலே எம்பெருமானுடைய எல்லாம் அறிந்த தன்மை யையும் தங்களுடைய குற்றங்களையும் எண்ணி இழக்க வேண்டாதபடி இருக்கிறார். இப்படிப் பரிந்துரைத்து எம்பெருமானிடம் சேர்ப்பிக்கும் இவள் அடியாரைப் பற்றி எம்பெருமானிடம் எப்போதாவது குறை சொன்னால் "என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்று குற்றங்களை நற்றமாகக் கொள்ளும் வாத்ஸல்யம் என்னும் குணத்தை உடையவன் எம்பெருமான்.

ஆகப்பிராட்டியும், பிராட்டியால் பெருமாளும் அடியார்களிடம் அன்பையே பொழியும வர்கள் என்பதை ஸ்ரீ பிள்ளை லோகாச்சாரியார் தனது ரகசிய நூல்களில் தெளிவாகக் காட்டியுள்ளார் என்பது உணரத்தக்கது.

## தீபம் ஏற்றுவோம்



கார்த்திகை மாதத்தில் தீபம் ஏற்றுவது எல்லோரும் அறிந்ததே. மாலை நேரத்தில் நாம் வசிக்கும் வீட்டின் முன், வீட்டிற்குள்,ஆலயத்தில் என பல்வேறு இடங்களில் தீபம் ஏற்றுவது நம் வழக்கம். திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் சஹஸ்ர தீப அலங்கார சேவை நடைபெறும். அவ் வேளையில் நம் இல்லங்களில் தீபம் ஏற்றி தாயாரை வணங்குவோம்!




## பசுமையைக் காத்திடுவோம்!

"திருமலையில் ஏதேனுமாவேனே!..." என்று பாசுரமிட்டார் குலசேகர ஆழ்வார். அத்திருமலை எழில் மிகு மரங்கள் நிறைந்து பசுமையாய், வெண்ணிற வண்ணத்தில் புண்ணிய தீர்த்தங்களான அருவிகளின் ஓசைகள் நிறைந்து, அரிய வன உயிரினங்களின் வாழ்விடமாகத் திகழ்கிறது. அத்தகைய எழில் மிகு நிறைந்த திருமலையைப் பாதுகாக்கும் பொறுப்பும் நம்மிடம் உள்ளது. நாம் உபயோகித்த பொருட்களை புனிதமான திருமலையில் ஆங்காங்கே வீசி எறிவதனால் இயற்கை வளமும், நீர் வளமும் மாசடைகின்றன. இதனால் மழைக் காலங்களில் மலைச்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்கள் நிகழ்கின்றன. அடர்ந்த வனப்பகுதியான இத்திருமலையையே வாழ்விடமாகக் கொண்ட அனேக உயிரினங்கள் அழிந்து விடும் அபாயம் உள்ளது. எனவே, நாம் புனிதமான இந்த சேஷாசல வனப்பகுதியை பாதுகாத்து, திருமலையானை தரிசனம் செய்து நம்முடைய சந்ததியினருக்கும் அந்த பெரும் பாக்கியத்தை நாம் அளித்திட வேண்டும்.

# லக்ஷ்மி கடாக்ஷம்

**தாமரை மலர்**

உங்களின் வீட்டில் எப்பொழுதும் “லக்ஷ்மி கடாக்ஷம் இருக்க” தாமரை மலர் வழிபாடு முக்கியம்.

உங்கன் வீட்டின் பூஜையறையில் உங்களின் குல தெய்வம் அல்லது இஷ்ட தெய்வத்தை வெள்ளிக்கிழமை அன்று தாமரை மலரை வைத்து வணங்குங்கள். உங்களின் வீட்டில் எப்பொழுதும் லக்ஷ்மி கடாக்ஷம் இருக்கும்.

மலர்களில் சிறந்தது தாமரை மலர். இதனை பூவுக்குத் தாமரையே, பொன்னுக்கு சாம்புநதம் என்கிறது ஒரு பழம்பாடல். வேதங்களுக்கு எத்தனை பெருமை உண்டோ அத்தனை பெருமை தாமரை மலருக்கும் உண்டு. மஹாலக்ஷ்மி தாயாரை நினைக்கும் போது நமக்கு தாமரையின் தோற்றம் நினைவுக்கு வரும்.

ஏன் என்றால் மஹாலக்ஷ்மி மிக விரும்பித் தங்குவது தாமரை மலரில்தான். தெய்வமலர் என்றே தாமரை மலருக்கு ஒரு பெயர் உண்டு. இந்த மலர்கள் இறைவனை பூஜை செய்வதற்கு மட்டுமே பயன்படுகிறது. யாரும் தலையில் சூடிக் கொள்வதில்லை. திருமாலுக்கு மிகவும் பிரியமான மலர் தாமரை மலர்.

உங்களின் இஷ்ட தெய்வத்தை வணங்கினால் போதும். அதாவது உங்களின் தெய்வமே லக்ஷ்மியாக இருந்து உங்களுக்கு நல்லதை செய்துக்கொடுக்கும். உங்களின் குலதெய்வம் ஒரு ஆண் தெய்வமாக இருந்தால் அந்த இடத்தில் ஒரு பெண் தெய்வமும் இருக்கும். எப்படிப்பட்ட ஆண் தெய்வமாக இருந்தாலும் அந்த இடத்தில் ஒரு பெண் தெய்வம் இல்லாமல் இருக்காது. உங்களின் வீட்டில் தாமரை மலரை வைத்து பூஜை செய்யும்பொழுது உங்களின் வீட்டில் அனைத்து செல்வங்களும்



**– திரு. அசோக் ராஜா, சென்னை,**
**97503 33265.**

தடை இன்றி கிடைக்கும். வருகின்ற வெள்ளிக்கிழமை முதல் இதனை செய்யத் தொடங்குங்கள்.

அவ்வப் போது பறித்து ஐந்து நாட்களுக்குள் உபயோகிக்கலாம். ஒரு மலர் மட்டும் வைக்காமல் குறைந்தது நான்கு மலர்களாக வாங்கி வந்து பூஜை அறையை அலங்கரியுங்கள். வீட்டில் பூஜையறையில் வெள்ளைத் தாமரைப் புஷ்பத்தை வைத்து போக வர இதனை தரிசித்துக் கொண்டிருந்தால் இறைச் சிந்தனை அடிக்கடி ஏற்படும். தவறுகளுக்கு ஆளாகாதும் காக்கும்.

ஞாயிற்றுக்கிழமை தாமரைப் பூக்களால் அம்பிகையை அலங்காரம் செய்து வழிபடுதல் நன்று. இதனால் இல்லத்தில் கடன் வராது. பெண்களுக்கு மகா பதிவிரதைத் தன்மையைக் கொடுக்கும்.

வெள்ளிக்கிழமை தோறும் பசுவிற்குத் தாமரை மலர்களைச் சாற்றி வழிபட்டு வந்தால் உத்தமர்களின் ஆசி திரண்டு வரும். இது தீர்க்க சுமங்கலித்துவத்திற்கு உதவும்.

**பணவரவை அள்ளித்தரும் குபேர லக்ஷ்மி**

உங்களுடைய வாழ்க்கை செல்வ செழிப்போடு இருக்க வேண்டும் என்றால், நிச்சயம் குபேர–லக்ஷ்மி



வழிபாடு அவசியம். சகல செல்வ கடாக்ஷங்களையும் தந்தருளக் கூடியவள் மஹாலக்ஷ்மி. அதனால்தான் லக்ஷ்மி கடாக்ஷம் தரும் குபேர லக்ஷ்மி வழிபாடு மிக மிக உன்னதமானது.

ஒருவரது வீட்டில் செல்வம் பெருகவும், சேர்ந்த செல்வம் கரைந்திடாமல் காக்கவும் ஒருவர் செய்ய வேண்டிய மிகச் சிறந்த பூஜை குபேர லக்ஷ்மி பூஜையே. இதனால் கிடைக்கப்பெறும் பலன் மிக மிகப் பெரிது.

**பூஜை செய்யும் முறை :**

இப்பூஜையை ஒன்பது வாரம் அல்லது ஒன்பது மாதம் தொடர்ந்து ஒரே நாளில் செய்ய வேண்டும். ஒன்பது வாரம் பூஜை செய்ய நினைப்பவர்கள் வாரம் தோறும் வெள்ளிக் கிழமையன்று இப்பூஜையைச் செய்யலாம்.

அதேபோல் ஒன்பது மாதம் செய்ய நினைப்பவர்கள் ஒவ்வொரு மாதமும் வரும் பௌர்ணமியன்று இப்பூஜையைச் செய்யலாம். இப்பூஜையை ஒருவர் மட்டுமே தொடர்ந்து செய்ய வேண்டும். அவரால் முடியாத பட்சத்தில் அதே குடும்பத்தை சேர்ந்த வேறொருவர் செய்யலாம்.

வெள்ளிக்கிழமை அல்லது பௌர்ணமி நாட்களில் அதிகாலையில் எழுந்து நீராடி விட்டு, பூஜையறையில் குலதெய்வத்தை மனதார வேண்டி தீபம் ஏற்ற வேண்டும். பின்பு, பூஜை தடைபடாமல் இருக்க விநாயகரை வணங்கி ஆரம்பிக்கவும்.

இந்த பூஜையைச் செய்வதால் வீட்டில் நிச்சயம் பணத்தட்டுபாடு நீங்கி செல்வம் பெருகும். அதோடு வீட்டில் நிம்மதியும் சந்தோஷமும் நிலைக்கும்.

குபேர லக்ஷ்மி வழிபாட்டை செய்ய செய்ய கடன் தொல்லைகளிலிருந்து நிவர்த்தி பெறலாம். வீட்டில் இதுவரை இருந்த கஷ்டங்களில் இருந்து மீளலாம். மேலும் வீட்டில் சுபிக்ஷம் நிலவும். பணவரவை அதிகரிக்கச் செய்யும்.



# மங்களம் பெருக்கும் மஹாலக்ஷ்மி தலங்கள்

– டாக்டர் அருண்குமார்,
புதுச்சேரி.





## திருக்கண்ணமங்கை

108 திவ்ய தேசங்களில் ஒன்றாகும். திரு வாரூருக்கு அருகேயுள்ளது. திருமகளான மஹா லக்ஷ்மிக்கு நடந்த திருமணத்தைக் காண தேவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டேயிருந்தார்கள். தேனீக்களின் வடிவில் கூடு கட்டி பெருமாளை தரிசித்தபடி இருந்தனர். பாற்கடலிலிருந்து வெளிப்பட்ட மஹாலக்ஷ்மி முதலில் பெருமாளின் அழகிய திருமுகத்தைக் கண்டாள். அதை உள்ளத்தில் நிறுத்தி இத்தல நாயகனையே திரு மணம் செய்ய வேண்டுமென்று இங்கு வந்து தவமியற்றினாள். பெருமாளே தன் பாற்கடலை விட்டு இங்கு வந்து மஹா லக்ஷ்மியை மணம் புரிந்ததால் பெரும்புறக்கடல் என்கிற திரு நாமமும் பெருமாளுக்கு உண்டு. மேலும், இந்த க்ஷேத்ரத் திற்கு லட்சுமி வனம் எனும் திருப்பெயர் உண்டு. பஞ்ச கிருஷ்ண தலங்களில் இதுவும் ஒன்று.

## திருநின்றவூர்

மஹாவிஷ்ணுவிடம் கோபித்துக் கொண்டு வைகுண்டத்தை விட்டு திரு என்கிற மஹாலக்ஷ்மி இங்கு வந்து நின்றதால் இத்தலம் திருநின்றவூர் என்றானது. சமுத்திரராஜனே சமாதன மாக என்னைப் பெற்ற தாயே என்று இரைஞ்சி வேண்டிக் கொண்டதாலேயே இவளுக்கு இத்தலத்தில் என்னைப் பெற்ற தாயே எனும் திருப்பெயர். குபேரன் தன் நிதியை இழந்து இத்தலத் திற்கு வந்து வேண்டிக் கொண்டதா லேயே மீண்டும் பெரும் நிதியை அடைந் தான். நூற்றியெட்டு திவ்ய தேசங்களில் இதுவும் ஒன்றாகும். சென்னை–திருவள் ளூருக்கு அருகே இத்தலம் அமைந் துள்ளது.

## கூடலூர்

இக்கோயிலை கூடல் அழகிய பெருமாள் கோயில் என்பர். தல விருட்ச மாக புளிய மரம் அமைந்துள்ளது. தாயாரின் திருநாமம் மஹாலக்ஷ்மி என்பதே யாகும். கூடலழகர் அஷ்டாங்க விமானத் தின் கீழ் எழுந்தருளி இருக்கி றார். கோயில் முன் மண்டபத்தில் மஹாலக்ஷ்மி, கையில் வெண் ணெயுடன் நவநீத கிருஷ்ணர் போன்றோர் வீற்றுள்ளனர். கோயிலின் முன் மண்டப மேற் சுவற்றில் ராசி சக்கரமும் இதன் மத்தியில் மஹா லக்ஷ்மியும் காட்சி தருகிறாள். கருவறை யில் கூடல் அழகிய பெருமாள் நின்ற கோலத்தில் தாயார்க ளோடு சேவை சாதிக்கிறார். இத்தலம் தேனிக்கு அருகே உள்ளது.

## திருவாலி

மஹாலக்ஷ்மியோடு பெருமாள் நரசிம்ம கோலத்தில் வீற்றிருப்பதால் இத்தலத்திற்கு லக்ஷ்மி நரசிம்ம க்ஷேத்ரம் என்று பெயர். திருமங்கையாழ்வா ருக்கு அருள்பாலிக்க வேண்டு மென்று லக்ஷ்மி தேவி பெருமாளை இடைவிடாது வேண்டினாள். லக்ஷ்மியும் திருவாலியில் தவமியற்றும் பூரண மஹரிஷிக்கு மகளாக அவதரித்தாள். பெருமாளை லக்ஷ்மி தேவி மணம் புரிந்து

வரும்போது திருமங்கை மன்னன் வழிப்பறி செய்ய அவரது காதில் பெருமாள் அஷ்டாக்ஷர மந்திரத்தை கூறி ஆட்கொண்டார். மூல வராக இருக்கும் நரசிம்மர் லக்ஷ்மியாகிய திருவை ஆலிங்கனம் செய்து கொண்டிருப்பதால் திருஆலங் கன ஊர் என்பது திருவாலி என்று மருவியது. நூற்றியெட்டு திவ்ய தேசங்களில் ஒன்றான இத்தலம் சீர்காழிக்கு அருகேயுள்ளது.

### திருத்தங்கல்

ஸ்ரீதேவி எனும் மஹாலக்ஷ்மி வைகுண்டத்தை விட்டு புறப்பட்டு "தானே மற்ற தேவியரைக் காட்டிலும் சிறந்தவள்" என்று நிரூபிக்க தங்காலமலை எனும் திருத்தங்கலுக்கு வந்து தவமியற்றினாள். செங்கமல நாச்சியார் எனும் திருநாமத்தோடு இத்தலத்தில் திருமகள் தங்கியதால் திருத்தங்கல் என்றாயிற்று. பெருமாளும் திருமகளின் தவத்திற்கு மெச்சி ஏற்றுக் கொண்டார். நின்ற கோலத்தில் நாராயணன் அருளும் தலம் இது. திருத்தங்காலப்பன் எனும் திருப்பெயரும் பெருமாளுக்கு உண்டு. இத்தல தாயாருக்கோ செங்கமலத்தாயார், கமல மஹாலக்ஷ்மி, அன்ன நாயகி, ஆனந்த நாயகி, அமிர்த நாயகி என்று பல்வேறு திருப்பெயர்கள் உண்டு. நூற்றியெட்டு திவ்ய தேசங்களில் இத்தலமும் ஒன்று. விருதுநகருக்கு அருகே இத்தலம் அமைந்துள்ளது.

### அரசர்கோயில்

செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள அரசர் கோயில் எனும் இடத்தில் ஆலயம் கொண்டுள்ள சுந்தர மஹாலக்ஷ்மியின் வலது பாதத்தில் ஆறு விரல்கள் இருப்பது குறிப்பிடத்தக்க அதிசயம். ஒரு முறை ஜனக மஹாராஜாவும், பெருமாளும் இத்தலத்தில் சேர்ந்திருக்க நேரிட்டதால் இத்தலம் அரசர்கோயில் என்றானதாம். கற்பூர ஆரத்தி காட்டி, தாயாரின் வலது பாதத்தை தரிசிக்கும் வாய்ப்பை வழங்குகிறார் பட்டர். இடது கரத்துக்குக் கீழே பத்மாசனமாக மடித்து வைத்த நிலையில் இருக்கிறது. வலது பாதம் அதில் சுண்டு விரலை அடுத்து அழகான ஆறாவது விரல். இந்த ஆறு விரல்கள் உள்ள பாதத்தை தரிசிப்பவர்களுக்கு அதிர்ஷ்டத்தை அள்ளி அள்ளித் தருகிறாள் மஹாலக்ஷ்மி என்பது ஐதீகம். அன்னைக்குப் பலாச் சுளைகளால் அபிஷேகம் செய்து பின் அவற்றை பக்தர்களுக்குப் பிரசாதமாக தருகிறார்கள். செங்கல்பட்டு மதுராந்தகம் பாதையில் படாளம் கூட்டு ரோட்டிலிருந்து இடது பக்கம் செல்லும் சாலையில் 6 கி.மீ. தொலைவில் உள்ளது அரசர்கோயில்.

### மங்களகிரி

பெருமாளின் திருமார்பில் உறையும் லக்ஷ்மிக்கு யோக லக்ஷ்மி என்று பெயர். இருபக்கமும் உள்ள தாயாருக்கு போக லக்ஷ்மி, வீரலக்ஷ்மி என்றும் பெயர். ஸ்ரீலக்ஷ்மி என்று போற்றப்படும் மஹாலக்ஷ்மி ஆந்திர மாநிலத்திலுள்ள மங்களகிரி எனும் தலத்தில் எளிமையான கோலத்தில் அருள்பாலிக்கிறாள்.

### தவக்காசியின் மஹாலக்ஷ்மி பீடம்

காசியில் மரித்தால் முக்தி கிட்டும் என்பது விஸ்வநாதரின் வேதவாக்கு. அதனாலேயே இன்று வயதானவர்கள் காசியிலேயே வாழ்ந்து முக்தியை அடைவர். இதே காசியில்தான் மஹா லக்ஷ்மி பீடமும் உள்ளது. இங்குள்ள சித்தலக்ஷ்மி ஆலயம் தாமரை



வடிவில் இருந்ததாக காசி காண்டம் கூறுகிறது. அருகேயே லக்ஷ்மி குண்டம் அமைந்துள்ளது. வாரணாசியில் மஹாலக்ஷ்மியால் பூஜிக்கப்பட்ட லிங்கம் மகாலக்ஷ்மீஸ்வரர் எனும் திருப்பெயரோடு இன்றும் விளங்குகிறது. தீபாவளி அன்று காசி கங்கையில் ஸ்நானம் என்பதே விசேஷமாகும். அதிலும், மஹாலக்ஷ்மீஸ்வரரை தரிசிப்பதென்பது இன்னும் அதிவிசேஷமாகும்.

### கொற்கை

சிவபெருமான் மீது மலர்க்கணை தொடுத்தான் மன்மதன். ஈசனின் நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்ட மன்மதனை உயிர்ப்பித்துத் தர வேண்டி ரதிதேவி மஹாலக்ஷ்மியை வேண்டினாள். மஹாலக்ஷ்மியும் இத்தல ஈசனுக்கு வழிபாடுகள் செய்தார். மன்மதனை உயிர்ப்பித்தார். மஹாலக்ஷ்மி இவ்வாறு வழிபாடு செய்த லிங்கம் லக்ஷ்மீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறது. நீண்ட ஆயுளும், செல்வமும் வேண்டுவோர் இத்தல ஈசனை வழிபட்டு பயனடைகின்றனர்.

### திருப்பத்தூர்

சிவபெருமான் எத்தனையோ அடியார்களுக்காக தனது திருத் தாண்டவத்தினை காட்டியருளினார். அப்படி ஒருமுறை திருமகளின் வேண்டுகோளுக்கு இணங்கி இத்தலத்தில் திருத்தாண்டவம் புரிந்தார். இந்த தாண்டவத்திற்கு லக்ஷ்மி தாண்டவம் என்று பெயர். இந்த அரும்பெருங்காட்சியைக் கண்ட திருமகள் இத்தல ஈசனை போற்றி வணங்கி பூசித்தாள். எனவே, இங்குள்ள தீர்த்தத்திற்கு ஸ்ரீதீர்த்தம் என்று பெயர்.

### சென்னை - மயிலாப்பூர்

சென்னை மயிலாப்பூரிலுள்ள ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் தனிச் சந்நதியில் மயூரவல்லித் தாயார் கோயில் கொண்டிருக்கிறார். மயூரபுரி என்றும் மயிலாப்பூருக்கு

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 76க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ற் | ப | க | வ | ல் | லி | ல் | வ | ள | வ | 2 ப |
| ன | 3 அ | ம் | பு | ஜ | வ | ல் | லி | | | 4 வே | ரி |
| க | ஞ் | | 5 பு | ஷ் | ப | வ | ல் | லி | | த | ம |
| வ | சி | 6 கோ | ண் | | ன | ய | | 7 வை | | வ | ள |
| ல் | லை | ம | ட | | ஹ | கி | | கு | லி | ல் | வ |
| லி | வ | ள | ரீ | | 8 மோ | ழ | த | ந் | ல் | லி | ல் |
| லி | ல் | வ | க | ஷே | பி | 9 அ | மு | த | வ | ல் | லி |
| ல் | லி | ல் | வ | தா | 10 சீ | ர | 11 கு | வ | ல | வ | ல் |
| வ | | லி | ல் | | | வி | | ல் | பி | ணி | வ |
| ல | | | லி | | | ந் | | லி | ஹோ | ம | ர |
| ம | லி | ல் | வ | ட | க | த | ரு | ம் | 12 அ | மா | து |
| 13 க | ல் | யா | ண | வ | ல் | லி | | த | க | 14 ர | 15 ம |





## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.2
## செப்டம்பர் 2022 விடைகள்

1. அனந்தாழ்வான்.
2. இராமாநுஜர்.
3. ஸ்ரீபிரசன்ன வேங்கடேச பெருமாள்.
4. மேக சந்தேசம்.
5. பெரியாழ்வார்.
6. அன்னமய்யா.
7. ஏகாந்த சேவை.
8. 1057.
9. சம்பக மரம்.
10. திருவோணம்.
11. ஆண்டாள்.
12. ஸ்ரீவேதாந்த தேசிகர்.
13. குலசேகராழ்வார்.
14. இராமாநுஜர்.
15. நம்மாழ்வார்.




**போட்டி எண்.2ற்கான சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் எல். ஜெய்கிருஷ், தான்தோன்றி மலை, கரூர் மாவட்டம்.
2. செல்வி எம். தேஜஸ்வினி மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்.
3. செல்வி வி. தர்ஷிணி, வல்லம், தஞ்சாவூர் மாவட்டம்.

வேறொரு திருநாமம் உண்டு. இங்கு எழுந்தருளி இருக்கும் மஹாலக்ஷ்மிக்கு வில்வ தளங்களைக் கொண்டு அர்ச்சித்தால் மஹாலக்ஷ்மியின் பூரண அருள் கிட்டும். மயூர வல்லித்தாயார் மேலிரு திருக் கரங்களில் தாமரை மலர் களைத் தாங்கி கீழிரு திருக் கரங்கள் அபய வரத ஹஸ்தம் காட்டி அருள்கிறாள். வெள்ளிக்கிழமை அன்று மயூரவல்லித்தாயார் சந்நதிக்கு வந்து சந்நதியின் கதவில் மணிக்கட்டி பிரார்த்தனை செய்து கொண்டு, வில்வார்ச்சனை செய்து வழிபட, வேண்டும் வரம் தருகிறாள்.

### பேளூர் கரடிப்பட்டி

கரடிப்பட்டியில் லக்ஷ்மி நாராயணப் பெருமாளின் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தில் அஷ்ட லக்ஷ்மிகளின் பளிங்குச் சிலைகள் கண்களையும் மனதையும் கவர்கின்றன. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரிலிருந்து கொண்டு வரப்பட்டவை இச் சிலைகள். செவ்வக வடிவிலான மகா மண்டபத்தைச் சுற்றிலும் தனித்தனி சந்நதிகளில் இவை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு லக்ஷ்மியும் அவரவர்க்குரிய திக்கு நோக்கி அருள்பாலிக்கின்றார்கள். மூலவர் லக்ஷ்மி நாராயணர் தனது மடியில் மஹாலக்ஷ்மியை அமர வைத்திருக்கும் கோலம் கொள்ளை அழகு! எந்த திக்கிலிருந்தும் துயரம் தீண்டி விடாதபடி அஷ்ட லக்ஷ்மிகள் பக்தர்களைக் காக்கிறார்கள். சேலம் மாவட்டம், வாழப்பாடியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

### திருச்சி-ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கத்திலேயே காட்டழகிய சிங்கர் திருக் கோயில் அமைந்துள்ளது. பெருமாள் கோயிலில் பிரதோஷ பூஜை என்பது இத்தலத்தில் சிறப்பாகும். கருவறையில் சுமார் 8 அடி உயரத்தில் லக்ஷ்மி நரசிம்மர் மஹாலக்ஷ்மியை தனது இடது திருத் தொடையில் அமர வைத்து ஆலிங்கன நிலையில் அருள்பாலிக்கிறார். வலது கையால் அபய ஹஸ்தம் காட்டி அருள்கிறார்.

### வரகூர்

லக்ஷ்மி நாராயணர், வராக மூர்த்தி, கிருஷ்ணர் என்று மூன்று கோலங்களில் பெருமாள் அருள்பாலிக் கிறார். இத்தலத்தில் நடைபெறும் உறியடி உற்சவம் உலகப் பிரசித்தி பெற்றதாகும். கருவறையில் லக்ஷ்மி நாராயணர் பத்ம விமானத்தின் கீழே இடது திருத்தொடையில் மஹாலக்ஷ்மியை அமர்த்தியபடி சேவை சாதிக்கிறார். இக்கோயிலில் துளசி, ஏலக்காய், பச்சைக் கற்பூரம், ஜாதிக்காய், கிராம்பு உள்ளிட்ட மூலிகைகள் சேர்த்து இடித்த பொடியை பிரசாதமாகத் தருகிறார்கள். தஞ்சைக்கு அருகேயே இத்தலம் அமைந்துள்ளது.

# திருமகள் சேர் மார்பன்

- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி.







இந்த மண்ணில் மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் எம்பெருமானின் மலர்ப்பதம் கிடைக்க வேண்டும். அதற்கு என்ன வழி?

சில வழிகளைச் சொல்கின்றார் பிள்ளை பெருமாள் ஐயங்கார்.

1) ஆழ்வார்களின் அருந்தமிழை ஒருவன் அர்த்தத்தோடு கற்க வேண்டும். ஏனென்றால் வைணவத்தில் பாசுரங்களைப் போலவே அதற்கான வியாக்கியானங்களும் முக்கியம்.

2) அப்படிக் கற்க முடியாவிட்டால் ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆழங்கால் பட்ட ஆசாரியர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்.

3) திருமால் அடியார்களின் திருப்பாதங்களைப் பணிந்து போற்ற வேண்டும்.

4) அதுவும் இயலாவிட்டால் வைணவத்தின் பரம குருவான எதிராஜர், எம்பெருமானார் இராமாநுஜரின் திருவடியே சரணம் என்று சதா சர்வ காலமும் நினைக்க வேண்டும்.

5) இத்தோடு என்றென்றும் திருவேங்கடத்தை நினைத்துக் கொள்ள வேண்டும்.

6) திருவேங்கட தரிசனம் என்பது ஒருவன் ஆன்மா கடைத்தேறுவதற்கான முக்கியமான வழி என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

7) சரி. இவ்வளவும் முடியவில்லை. என்னதான் செய்வது? என்று இருப்பவர்களுக்கும் ஒரு வழியைக் காட்டுகின்றார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

8) அவரவர் இருந்த இடத்தில் இருந்தாவது திருவேங்கடத்தைத் துதிக்க வேண்டும்.

இவ்வளவையும் சொல்லி விட்டு நிறைவாக ஒரு விஷயத்தைச் சொல்கிறார். இதையெல்லாம் செய்யாவிட்டால் எம்பெருமானின் திருவடி ஒருவனுக்கு எப்படி கிடைக்கும்? இதை ஒரு பாடலாக அவர் பாடி இருக்கின்றார்.

***“பதின்மர் செந்தமிழைப் படிக்கிலாய் கேளாய்***
***படித்தபேர் தாளையும் பணியாய்***
***எதிபதி சரணே சரணமென் றொருகால் இசைக்கிலாய்***
***எமது வேங் கடத்தைத் துதி செயாய்***
***இருந்த இடத் திருந்தேனும் தொழுகிலாய்***
***வாழி என் மனனே!***
***மதிநுதல் அலர்மேல் மங்கை நாயகனார்***
***மலர்ப்பதம் கிடைப்பது எவ்விதமே?”***

என்பது திருவேங்கடக் கலம்பகப் பாடல். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்குப் “பதின்மர் செந்தமிழ்” என்னும் பெயர் இப்பாடலில் தரப் பட்டுள்ளது. இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான ஒருவரி கடைசி வரி. பெருமாள் மலர்ப்பதம் கிடைப்பது என்று சொல்லவில்லை. தாயாரான அலர்மேல் மங்கைக்கு முக்கியத்துவம் தந்து, அலர்மேல்மங்கை நாயகனார் மலர்ப்பதம் என்று



பெருமாளைச் சொல்லுகின்றார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். வைணவத் தின் அடிநாதமான கருத்து இதுதான். திருமகளோடு கூடிய திருமால் ஸ்ரீமந்நாராயணன்.

ஸ்ரீ:பதி என்று பிராட்டியோடு தான் பெருமாள் வைபவம் என்று (*யப் பூர்வாய வேதஸே நவீ யஸே - தைத்திரிய ப்ராம்மணம்*) பேசப்படுகிறது. மந்திர ரத்னமான துவய மந்திரத்தின் மையக் கருத்து இதுதான். திருமகளோடு கூடிய திருமாலைச் சரணடைந்து எல்லாத் தொண்டுகளும் செய்ய வேண்டும் என்பதே ஒவ்வொரு ஆன்மாவின் சொரூபம்.

சகல வேதங்களும் இதைத்தான் சுட்டிக் காட்டுகின்றன. இந்த துவய மந்திரத்தின் விரிவாக்கமே திருவாய்மொழி என்று ஆசாரியர்கள் ஒரு மிடறாகக் கொண்டாடுகிறார்கள்.

சகல வேதங்களின் சாரம் ஓங்காரம் (பிரணவம்). பிரணவம் "**அ**" கார, "**உ**"கார, "**ம**" காரங்களால் உருவானது. "**அ**" காரம் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் குறிக்கும். அக்ஷரங்களில் நான் "**அ**" காரமாக இருக்கின்றேன் என்கிறார் பகவான் கீதையில், இரண்டாவது எழுத்து "**உ**" என்பது பிராட்டியைக் குறிக்கும். "**ம**" என்கிற எழுத்து ஜீவாத்மாவைக் குறிப்பது.

பிராட்டியை முன்னிட்டுத் தான் எம்பெருமானைச் சரணடைய வேண்டும் என்பது தான் துவய மந்திரம். அந்த மந்திரத்தை விளக்க வந்த திருவாய் மொழியின் முதல் பாசுரத்தின் முதல் எழுத்தாக "**உ**" காரத்தைப் பயன்படுத்தி தொடங்குகின்றார் நம்மாழ்வார்.

***உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்***
***மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்***
***அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்***
***துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே***

காரணம், திருமந்திரத்தை விடவும், சரம சுலோகத்தை விடவும், இடையில் இருக்கக் கூடிய துவய மந்திரம் பல்வேறு கோணங்களில் மிகவும் சிறப்பானது என்பதை வைணவ ரகசிய நூல்கள் பறைசாற்றும். பொதுவாக எல்லாச் சாத்திரங்களும் ஒருவனுக்குத் தேகத்தாலே பேறு கிடைக்கும் என்று ஒரு முகமாகப் பேசும். ஆனால், திருமந்திரம் ஆன்மாவால்தான் அப்பேறு கிட்டும் என்று கூறும். சரமசுலோகம் ஈசுவரனாலேயே அப்பேறு கிடைக்கும் என்று அறுதியிடும். ஆனால், துவய மந்திரமோ ஒருவனுக்குப் பேறு கிடைப்பது பெரிய பிராட்டியாராலே என்று இயம்பும் (முமுட்சு 117) துவயம், என்பதற்கு இரண்டு என்பது பொருள்.

***ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே***
***ஸ்ரீமதே நாராயணாய நம*** என்பது துவய மந்திரம். இரண்டு வாக்கியங்கள் அமைந்திருத்தலின் இந்த மந்திரம் துவயம் என்று திருநாமம் பெற்றது. கட உபநிடதத்தில் இருந்து திரட்டப்பட்ட சாரம் என்பார்கள். இதன் பொருளை விளக்கும் போக்கில் பிள்ளை உலக ஆசிரியர்,

இதன் முற்கூற்றால் பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈசுவரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறோம். பிற்கூற்றால் அச்சேர்த்தியிலே வழுவிலா அடிமை செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம் (முமுட்சு 122). அதனால் தான் உயர்வற உயர்நலம் உடையவன் என்று தொடங்கி, துயரறு சுடரடி தொழுது எழு என் மனனே என்று முதல் பாசுரத்தை நிறைவு செய்தார் நம்மாழ்வார்.

**தொடரும்...**



# நவம்பர் 2022
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். தொழில் விருத்தி உண்டு. வேலை இல்லாதவர்களுக்கு இம் மாதம் வேலை வாய்ப்பு கிடைக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். கணவன்-மனைவி பிரச்சனைகள் விலகும். நவம்பர் மாதம் 13ஆம் தேதிக்குப் பின் சகோதரனுக்கு விருத்தி உண்டு.

**ரிஷபம்**

பூமி, புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. கடன் வாங்கிச் சுபச்செலவுகள் செய்யலாம். சகோதர வழியில் தனலாபம் உண்டு. தொழில் அலைச்சல் காரணமாகத் தூக்கம் குறையும். எதிரிகளாலும் போட்டியாளர் களாலும் தொல்லைகள் உண்டு. தெய்வ தலங்களுக்கு யாத்திரை செய்து நல்ல தரிசனம் கிடைக்கப் பெறுவீர். தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்**

ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் உண்டாகும். வருமான விஷயத்தில் காரியத் தாமதமாகும். தொழில் துறையில் விரிவாக்கம் செய்ய வேண்டியிருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் உண்டு. குழந்தைகள் ஆரோக்யம் நன்றாக இருந்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர். புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டுப் பல துறைகளில் வெற்றி பெறுவீர்.

**கடகம்**

கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் குறையும். தெய்வ தலங்களுக்கு யாத்திரை செய்து நல்ல தரிசனம் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் உதவிகளைப் பெறுவீர். தொழில் துறையில் எதிர்பார்த்த தனலாபம் கிடைக்கும். வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். தொழில் துறையில் விஸ்தரிப்பு வேலைகளைச் செய்யலாம்.

**சிம்மம்**

ஆரோக்யத்தில் அக்கறை தேவை. வயிற்றிலும் ஜீரண உறுப்புகளிலும் கோளாறு உண்டாகும். தொழில் துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். முடிந்தவரை கடன் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. இளைய மூத்த சகோதரர்களின் உதவி கிடைக்கும். தந்தையின் ஆரோக்யத்தில் சிறு குறைபாடுகள் உண்டாகும். குலதெய்வ பூஜையினால் காரிய வெற்றி உண்டாகும்.

**கன்னி**

தொழில் துறையில் நல்ல வளர்ச்சி, தனலாபம் உண்டு. அலைச்சலுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். ஆரோக்யத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். குருபலம் உண்டு. திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும். தக்க சமயத்தில் உங்கள் வாழ்க்கைத் துணையிடமிருந்து நல்ல ஆலோசனைகள் பெறுவீர். இம்மாதம் சகல துறைகளிலும் சிறப்பான மாதமாக அமையும்.

**துலாம்**

கணவன்-மனைவிக்குள் மனக்குழப்பங்கள் தீரும். தாயின் ஆரோக்யத்தில் குறைபாடுகள் உண்டாகும். முடிந்த வரை கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். ஏற்கனவே சர்க்கரை நோய் உள்ளவர்கள் ஒரு முறை பரிசோதனை செய்து கொள்ளவும். மாணவர்கள் நன்கு படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழில் துறையில் அதிக அலைச்சலால் வருமானம் கிட்டும்.

**விருச்சிகம்**

தொழில் துறையில் அலைச்சலும் செலவினங்களும் மிகவும் அதிகமாக இருக்கும். இளைய சகோதரனின் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. தெய்வ தலங்களில் தரிசனம் கிட்டும். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றத்திற்கான வாய்ப்புகள் உண்டு. வெளியூர் பயணம் வெற்றியைக் கொடுக்கும்.

**தனசு**

தொழில் துறையில் எதிர்பார்த்ததை விட நல்ல லாபம் உண்டு. நண்பர்கள், உறவினர்கள் உதவிகள் செய்வார்கள். கல்வி நன்றாக அமையும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். உங்கள் ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் விலகும். மனைவியால் தனலாபம் உண்டு. சகல துறைகளிலும் பெரும் வெற்றியைப் பெறும் மாதமிது.

**மகரம்**

செய்யும் காரியங்களில் வெற்றியைப் பெறுவீர்கள். தொழில் துறையில் புதிய முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். சகோதர வழியில் தனலாபம் உண்டு. இளைய, மூத்த சகோதரர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். விரைவில் வீடு, நிலம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**கும்பம்**

செலவினங்கள் மிகவும் அதிகமாக இருக்கும். அதற்குரிய வருமானத்தைக் கஷ்டப்பட்டு பெறுவீர்கள். தாய், தந்தையரின் ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். தொழில் துறையில் அலைச்சல் காரணமாகத் தூக்கம் குறையும். சுபகாரியங்கள் நடக்கும். வீடு அல்லது தொழில் இடமாற்றம் செய்ய வேண்டி இருக்கும். இடமாற்றம் மிகுந்த நன்மையைத் தரும்.

**மீனம்**

மனைவி-குழந்தைகளின் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. திருஷ்டி மிகவும் அதிகமாக இருக்கிறது. உங்கள் செயல்பாடுகளை வெளியில் கூறினால் தோல்வியைப் பெறுவீர்கள். இம்மாதம் 15ஆம் தேதிக்குப் பிறகு காரிய வெற்றி உண்டு. தெய்வ பலத்தினால் சிரமங்களிலிருந்து விடுபடுவீர்கள். இம்மாதம் 15ஆம் தேதி வரை பிரயாணத்தை தவிர்ப்பது நல்லது.

நீதிக்கதை

# தாயாரிடம் பக்தி


- திருமதி எஸ்.வைஷ்ணவி, திருப்பதி



மஹாலக்ஷ்மி தாயார் ஏழை, பணக்காரர், வயதானோர், சிறு வயதினர் என்ற எந்த பாகுபாடுமின்றி அவரவர் காட்டும் பக்திக்கு ஏற்றவாறு அவர்களுக்கு பலனை அளிக்கக்கூடியவர். சிறு வயது முதற்கொண்டு நாம் இறைவனை சரண் அடைந்து நம் துன்பங்களைக் கூறினால் அதற்கு தீர்வு என்பது கிடைக்கும் என்பதனை உறுதியாக நம்புகிறோம்.

ஒரு நாள் சங்கராசாரியார் தன் சிறுவயதில் துறவற ஆசாரத்தின் பாகமாக பிக்ஷாடனத்திற்கு வரும் வழியில் ஓர் ஏழை பெண்மணியின் வீட்டிற்கு வந்தார். அவர் பிக்ஷை கேட்டவுடன் அந்த பெண்மணிக்கு தான் ஏதாவது தானம் அளிக்க வேண்டும் என எண்ணி வீட்டின் எல்லா இடத்திலும் தேடினாள். அவளுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. ஒரே ஒரு காய்ந்த நெல்லிக்கனி மட்டும் இருந்தது. அதை கொண்டு வந்து சங்கராசாரியாருக்கு அளித்தாள். அவளுடைய ஏழ்மையைப் போக்க எண்ணம் கொண்ட சங்காராசாரியார் மஹா லக்ஷ்மி தாயாரை துதித்து "கனகதாரா ஸ்தோத்திரம்" பாடினார். தாயாரும் மனமகிழ்ந்து ஆகாயத்தில் தோன்றி தங்கத்தால் ஆன நெல்லிக்கனிகளை அந்த ஏழை பெண்மணியின் வீட்டின் முன் பொழிந்தாள். சிறு குழந்தையான சங்கராசாரியாரின் சுலோகத்தைக் கேட்டு கனகதாரா (பொன்மழை) பொழிந்தாள் தாயார்.

ஸ்வாமி தேசிகன் மறு வேளைக்கு தனக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் அந்தந்த பொழுதிற்கு தேவையானவற்றை பிக்ஷாடனம் செய்து கிடைப்பதை கொண்டு உணவு உட்கொண்டு வாழ்ந்து வந்தவர். அந்த ஊருக்கு தன்னுடைய திருமணத்திற்குத் தேவையான பொருளை திரட்ட ஓர் ஏழை பிரம்மச்சாரி வந்தான். அங்கிருக்கும் ஒரு சிலர் ஸ்வாமி தேசிகனிடம் பொறாமை கொண்டு, அந்த பிரம்மச்சாரியிடம் ஸ்வாமி தேசிகனிடம் சென்று நீ யாசகம் கேட்டால் உனக்கு வேண்டியது கிடைக்கும் என அனுப்பி வைத்தார்கள். உண்மையறியாத அந்த பிரம்மச்சாரி ஸ்வாமி தேசிகனிடம் யாசகம் கேட்க, அடுத்த வேளைக்கு தன்னிடம் சேமிப்பு எதுவுமில்லாத என்னிடம் வந்து இந்த பிரம்மச்சாரி கேட்கிறானே! அவனுக்கு எவ்வாறு தான் உதவலாம் என எண்ணினார். அதற்காக சிறிதும் வருத்தப்படாமல் மஹாலக்ஷ்மி தாயாரை நோக்கி "ஸ்ரீ ஸ்துதி" என்னும் சுலோகத்தை இயற்றி தான் பாடியதோடு இல்லாமல் அந்த பிரம்மச்சாரிக்கும் கற்றுக்கொடுத்தார். அருகில் இருக்கும் தூப்புல் திவ்ய தேசத்திற்கு அழைத்துச் சென்று மஹாலக்ஷ்மி சன்னதி முன்னர் அதை பாராயணம் செய்யச் சொன்னார். அந்த பிரம்மச்சாரியும் அவ்வாறே செய்தான். மஹாலக்ஷ்மி தாயாரோ இதுவரை தன்னிடம் ஏதும் கேட்காத தேசிகர் இந்த பொழுதிலும் தனக்காக இல்லாமல் தன்னை நாடி வந்த ஓர் பிரம்மச்சாரிக்கு உதவும் எண்ணம் கொண்டு இந்த சுலோகத்தை இயற்றி கொடுத்துள்ளார். தாயாரும் பொற்காசுகளை பொன்மழை போல் பொழிவித்து அந்த பிரம்மச்சாரிக்கு அருள் மழை பொழிந்தார்.




நீதி : வயது சிறியதோ, பெரியதோ தாயாரிடம் உண்மையான பக்தி கொண்டு வேண்டினால் தாயார் மனமகிழ்ந்து நம் பக்திக்கு ஏற்ற பலனைக் கொடுப்பாள். தனக்காக இல்லாமல் பிறருக்கு உதவும் எண்ணம் கொண்டவருக்கு தாயார் விரைவான பலனை அளிப்பார்.

பல் சுவை பகுதி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### பொருத்துக...

1. நட்சத்திரம் - அ. ஆகாச ராஜன்
2. சாரே - ஆ. வகுள மாதா
3. ஸ்ரீநிவாசன்- இ. உத்திராடம்
4. பத்மாவதி - ஈ. தீர்த்தம்
5. பஞ்சமி - உ. மங்கல பொருள்

1.இ, 2.உ, 3.ஆ, 4.அ, 5.ஈ.



### சுலோகம் அறிவோம்!

கமலே கமலாக்ஷவல்லபே
த்வம்
கருணாபுர தரங்கிதை
பாங்கை
அவலோகய மாமகிஞ்ச
நாநாம்
ப்ரதமம் பாத்ரமக்ருத்ரிமம்
தயாயா:


–ஆதி சங்கரர் அருளிய கனகதாரா ஸ்தோத்திரம்

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

பத்மாவதி திருச்சானூரில் புஷ்கரணியில் பஞ்சமி தோன்றினாள் பத்மசரோவர தாயார் நாளன்று

திருச்சானூரில் பத்மசரோவர புஷ்கரணியில் பத்மாவதி தாயார் பஞ்சமி நாளன்று தோன்றினாள்

### பாதையைக் கண்டுபிடி



நிலத்தினை சமன் படுத்த ஏர் உழுதுக் கொண்டு இருந்தபோது, ஆகாச ராஜன் என்ற அரச னுக்கு தாமரை மலரின் நடுவில், குழந்தை வடிவில் காட்சித் தரும் ஸ்ரீபத்மாவதி தாயாரிடம் சென்றடைய அரசனுக்குப் பாதையைக் காட்டிடுங்கள்

### விடுகதை பகுதி...

1. வட்ட வட்ட நிலவில் வரைஞ்சிருக்கு. எழுதியிருக்கு. அது என்ன?
2. பார்ப்பதற்கு ஐந்து கால் எண்ணுவதற்கு நான்கு கால். அது என்ன?
3. எங்கள் வீட்டுக் கிணற்றிலே வெள்ளிக்கிண்ணம் மிதக்கிறது அது என்ன?

1.நாணயம், 2.யானை, 3.நிலா

# வி டி னா வி னா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி போட்டி எண் - 4



**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. சரணாகதி கத்யத்தை இயற்றியவர் ..............................
2. திருப்பிருதி ஜோஷிமட தலத்தின் நாயகி ..............................
3. "திருமகள் மேல் பாலோதம் சிந்தப்பட நாயகனை" எனப் பாசுரமிட்டவர் ..............................
4. திருவேங்கடமுடையானுக்கு பத்மாவதி தாயார் காட்சியளித்த திருக்குளம் ..............................
5. பத்மாவதி தாயாருக்கு திருமலையிலிருந்து "சாரே" எந்த உத்ஸவத்திற்கு அனுப்பப்படுகிறது ..............................
6. "மதிநுதல் அலர்மேல் மங்கை நாயகனை" எனும் பாடல் இடம் பெற்ற நூல் ..............................
7. குணரத்ன கோசத்தை இயற்றியவர் ..............................
8. சென்னை மயிலாப்பூரில் உள்ள ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தில் வீற்றிருக்கும் தாயார் ..............................
9. கனகதாரா ஸ்தோத்திரம் இயற்றியவர் ..............................
10. ஸ்ரீஸ்துதி இயற்றியவர் ..............................
11. திருச்சானூரில் தாயாருக்கு அபிஷேகம் நடைபெறும் நாள் ..............................
12. திருச்சானூரில் துலாபாரம் துவங்கப்பட்ட ஆண்டு ..............................
13. மதுரை திருக்கூடல் திவ்ய தலத்தில் அருள்புரியும் தாயார் ..............................
14. "குறுக்க நடவரோ கொம்மலாலா" என்ற பாடலை பாடியவர் ..............................
15. காகாசுரனை மன்னித்து அருள் புரிந்த தாயார் ..............................






### போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.11.2022.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |



**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**






## இதில் பொருந்தாதது எது?

குறிப்பு : பத்மாவதி தாயார், முருகன், அஷ்ட லக்ஷ்மி, கார்த்திகை மாத விரதத்திற்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்







1) மேகம்
2) வாழை மரம்
3) ஹோமகட்டைகள்
4) குடிசை பக்கத்தில் வேலி
5) பறவை
6) முனிவரின் புலிதோல்
7) மலை

# அலர்மேல்மங்கையின் திருவருள்

## சித்திரக் கதை

கதை மூலம் :டாக்டர் ஜெ.அனில்குமார்
சித்திரம் :திரு. கே.துவாரகநாத்

லக்கமாம்பா நாராயணசூரி தம்பதியினர் பிள்ளை பேற்றிற்காக திருவேங்கடவனிடம் வேண்டினர். அவர்களுக்கு நந்தகம் எனும் வாளின் அம்சமாக அன்னமய்யா பிறந்தார்.




குழந்தாய் அன்னமய்யா எழுந்திரு
தாயே! தாங்கள் யார்? என் கண்களுக்கு எதுவும் தென்பட வில்லையே
நான் அலர்மேல் மங்கை. உன் கால்களிலிருந்து காலணிகளை அகற்றி, உன் கண்ணிமைகளைத் திறந்து பார். அனைத்தும் தென்படும்.
அன்னமய்யா! பசியுடன் உள்ளாய் அல்லவா! இதோ ஸ்வாமி பிரசாதங்கள் தயிர்சாதம், புளியோதரை, பொங்கல் உட்கொள்.
ஸ்வாமி பிரசாதங்களை உண்ட பின்னர் அன்னமய்யாவிற்கு உற்சாகம் பிறந்தது. உடனே அலர்மேல் மங்கை தாயாரை பத்மசதகத்தால் துதித்தார். தாயாரும் ஆனந்தம் அடைந்து அருள் புரிந்து மறைந்தார். அன்னமய்யாவும் கீர்த்தனைப் பாடிக் கொண்டு திருமலை ஏறினார்.
“அதிவோ! அல்லதிவோ! ஹரிவாசமு...”
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _______________
(பெரிய எழுத்துக்களில்) _______________
_______________
_______________

அலைபேசி எண் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ ஐ.பி.ஓ)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஒ., ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road, Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருமலையில் நடைபெற்ற பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு ஆந்திர மாநில அரசு சார்பில் மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள் பட்டு வஸ்த்திரங்களை சமர்ப்பித்து திருவேங்கடவனை தரிசித்து, ஸ்வாமி பிரசாதங்களை பெற்றுக் கொண்டார். பின்னர் தி.தி.தே. 2023 நாற்காட்டி வெளியிட்டார். தி.தி.தே. புதியபரக்காமணி வளாகத்தையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் பொறுப்பாண்மைக்குழுத்தலைவர், செயலாட்சித்தலைவர் மற்றும் பிற உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்










SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-10-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/ 2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

